Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 திருவள்ளுவர் ஆண்டு- 2036 தை-17 30-01-2005 ஞாயிற்றுக்கிழமை ஓசை -347



கணேசா
நகையகம்
தங்கநகை உலகில்
தமக்கென தனியிடம்
பதித்தவர்கள்
இல:123. பஜார் வீதி.
வவுனியா.
T.P.-024-2222464
இல:14. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-11118)

# இத்தாலிய மருத்துவ உபகரணங்கள் கட்டுநாயக்காவில் தடுத்து வைப்பு

## வன்னிக்கு அனுப்பப்படவிருந்தனவாம்

(கொழும்பு)

**இத்தாலிய அரசாங்கத்தால் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பயன்பாட்டிற்கென அனுப்பிவைக்கப்பட்ட மருத்துவ உபகரணங்கள் சிறிலங்கா படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. அவற்றை வன்னிக்குக் கொண்டு செல்ல இத்தாலிய அரச அதிகாரிகள் முயன்றதையடுத்தே இவை தடுத்து வைக்கப்பட்டதாக இணையத்தளச் செய்தியொன்று கூறுகிறது.**

விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசமான வன்னிக்கு, இத்தாலிய அரசாங்கத்தின் பிரதி நிதிகளால் அனுப்பப்படவிருந்த 10 அம்பியூலன்ஸ் வண்டிகளும், அறுவைச்சிகிச்சைகளை மேற் கொள்ளும் நடமாடும் ஆய்வுகூட மொன்றும், சிறிலங்காப் பாது காப்பு அமைச்சின் அதிகாரிகளால் கொழும்பு விமான நிலையத்தில் வைத்து தடுத்து நிறுத்தப்பட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை சோதனைச்சாவடியில் இடுப்புப்பட்டியை கழற்றுமாறு பெண் போராளிகளிடம் வற்புறுத்தல்

யாழ்.முகமாலை சோதனைச் சாவடியூடாக பயணித்த பெண் போராளிகளை சிறிலங்காப்படையினர் அவர்கள் அணிந்திருந்த இடுப்புப் பட்டிகளை கழற்றிவிட்டு செல்லுமாறு வலியுறுத்தியுள்ளனர்.

நேற்று பிற்பகல் 3.00 மணிக்கு முகமாலைச் சோதனைச் சாவடியூடாக பயணித்த பெண் போராளிகளிடம் அவர்கள் அணிந்திருந்த இடுப்புப்பட்டிகளை கழற்றிவிட்டு செல்லுமாறு படையினர் வலியுறுத்தியதுடன் நீண்ட நேரவிசாரணைகளையும் மேற் கொண்டிருந்தனர். தொடர்ந்து இப் பெண் போராளிகள் நீண்ட நேரத்தின் பின்னரே யாழ். செல்லப்படையினரால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## அமெரிக்கக் கூட்டுப்படைகள் இருவாரங்களில் வெளியேறும்

நிவாரணப் பணிகளுக்கென இலங்கை வந்துள்ள அமெரிக்கக் கூட்டுப் படைக்குழு வினர் அடுத்த இரண்டு வாரங்களில் இலங்கையைவிட்டு வெளியேறுவார்கள் எனக் கட்டளையிடும் அதிகாரி நேற்றுத் தெரி வித்துள்ளார்.

அமெரிக்கக் கூட்டுப்படையினரைத் திருப்பியனுப்பும் நடவடிக்கைகள் நேற்று முதல் செயற்படுத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தமது நிவாரண நடவடிக்கையின்போது இலங்கையின் பாதுகாப்பு பிரிவினர் உட்பட பொதுமக்களிடமிருந்து அதிக பட்ச ஆதரவு கிடைத்ததாகவும் நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில், எமது ஒன்றிணைந்த நிவாரண

(12ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் கிளி.யில் இருந்து பயணம்!

(அலுவலக செய்தியாளர்)

விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களும், அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் அவர்களும் நேற்று கிளிநொச்சியிலிருந்து பயணமாகினர்.

நேற்றுப் பிற்பகல் 3.00 மணிக்கு சிறிலங்கா வான்படைக்கு சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கொழும்பு பயணமான அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர் களும் திருமதி. அடேல் பாலசிங்கம் அவர்களும்

(12ஆம் பக்கம் பார்க்க)



## நாட்டை மீளக் கட்டியெழுப்ப 15 நிகழ்ச்சித்திட்டக் கொள்கை

### ஐ.தே.கட்சி முன் வைத்தது

நாட்டை மீளக்கட்டியெழுப்ப 15 நிகழ்ச் சித் திட்டங்களுடனான தேசிய கொள்கை யொன்றை முன்வைத்திருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, அரசாங்கங்கள் மாறினாலும் இந்தக் கொள் கையை 15 ஆண்டுகளுக்கு முன்னெடுக்க ஒத்துழைப்பு வழங்குமாறு பொதுமக் களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது.

அரசியல் கட்சிகளின் சிந்தனை வேறுபட் டாலும் தேசியக் கொள்கையில் மாற்றம் ஏற்படாது செயற்படுத்துவதற்கான கலந்துரை யாடலில் இணைந்து கொள்ளுமாறு ஐ.தே.க வேண்டுகோள் விடுத்துள்ளது. முதலாவது நிகழ்ச்சித்திட்டமாக சமாதானமும் ஒற்றுமை யும் என்று மகுடமிட்டுள்ள ஐ.தே.க. 20 வருட

(12ஆம் பக்கம் பார்க்க)

## நெதர்லாந்து பிரதிநிதிகள்–புலிகள் டென் ஹக் நகரில் சந்திப்பு!

கடந்த வியாழக்கிழமை நெதர் லாந்தின் டென் ஹக் நகரிலுள்ள வெளிவிவகார அமைச்சக கட்ட டத்தில் நெதர்லாந்தின் வெளிவிவ கார அமைச்சின் முக்கிய பிரதி நிதிகளுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே சந்திப் பொன்று நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் லெப்.கேணல் ராஜன், கல்விப் பிரிவின் பொறுப்பாசிரியர் நில வன் கலந்துகொண்ட இச்சந்திப் பில், நெதர்லாந்தின் தெற்காசியப் பகுதிக்கான வெளிவிவகார அமைச்சர் வில்பிரெட் மோர், தெற் காசியப் பகுதிகளிற்கான முக்கிய பிரதிநிதி டிக்கி மெதோஸ்த் அம்மையார் மற்றும் மனித உரிமைகள் சமாதானத்திற்கான

(12ஆம் பக்கம் பார்க்க)



## மன்னாரில் டைனமைற் எறிந்து மீன்பிடிக்க முயன்றவர் பலி

மன்னார் கற்கடகத்தீவுக் கடலில் நேற்று டைனமைற் எறிந்து மீன் பிடிக்க முற்பட்ட சமயம் வில்ரன் ஜெயராஜ் (வயது -29) என்பவர் மரணமானார். இவர் இரணைதீவைச் சேர்ந்தவர். இவரின் சடலம் மன்னார் பெரிய பாலத்தில் வந்து ஒதுங்கியது. தற்சமயம் இவரது சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் பிரேத அறையில் உள்ளது. இவருடன் தொழில் செய்தவர்கள் சடலத்தைத் தேடி வந்தசமயம் மன்னார் பொலிசில் சரணடைந்துள்ளனர். (18)

## சமாதான முயற்சிகள் தொடர்பில் நோர்வேயுடன் ரணில் பேசுவார்

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க நேற்று மாலை நோர்வே பயணமாகியுள்ளார். ஐக்கிய தேசியக் கட்சி பாராளு மன்ற உறுப்பினர்களான மிலிந்த மொரகொட, மகேஸ்வரன் ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பயணமாகியுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. நோர்வே விஜயத்தின் போது நோர்வேப் பிரதமர் உள் ளிட்ட முக்கிய அரசத் தலைவவர்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சுனாமியால் அழிக்கப்பட்ட வயல்களில்
# இரு வருடங்களுக்கு பயிர் செய்ய முடியாது

### -மண்/நீர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் தெரிவிப்பு


சுனாமி அலை வந்து அழித்த பகுதியிலுள்ள நெல் வயல்கள் அனைத்திலும் குறைந்தது சுமார் இரண்டு வருடங்கள் நெற்செய்கை மேற்கொள்ள முடியாது என மண்/நீர் ஆராய்ச்சி உத்தியோகத்தர் சுதாகரன் தெரிவித்தார்.

மேலும் அவர் 'தெரிவிக்கையில்; கடல் நீரின் உப்பின் செறிவு 45% இருக்கும் இங்கு சுனாமி வந்த இடத்து மண்ணில் 28-30% வீத வரையான உப்பு கலந்துள்ளது என்றும் இதனால் இந்த வயல்களிலுள்ள உப்பு நீரை வெளியேற்றுவதனால்' இயற்கையான வடிகால் அமைப்பின் மூலமே நீக்கலாம். அதாவது மழைநீர் தேங்கி வாய்க்கால் வழியினால் கடலுக்குச் செல்லும் பாதைகளில் ஓடியே இந்த உப்புத் தன்மை இல்லாமல் செய்ய முடியும் என்று தெரிவித்தார். அத்துடன் கடல் நீர் தற்போது தேங்கி நிற்கும் நிலைகள் வெயிலிலை ஆவியாகி மேலே சென்று மழை நீராக சுனாமி வராத இடத்தில் பெய்யும் போது அதனாலும் ஏனைய இடங்களில் உள்ள பயிர்கள் அழியக்கூடிய வாய்ப்பு உள்ளது என்றும் சுனாமி அழித்த பகுதிகளை அண்டிய பகுதிகளில் உள்ள கிணறு, வயல் நிலங்களும நிலத்திற்கு கீழால் வந்த உப்பு நீரினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உவர் நீராக மாறும் நிலை தென்படுவதாகவும் மாதாந்தம் நிலத்தை பரிசோதனை செய்து மாவட்ட விவசாயத் திணைக்களத்திற்குத் தெரியப்படுத்துவதாகவும் இந்த உப்புத் தன்மை மழை நீரின் இயற்கையான வடிகால் அமைப்பின் ஊடாகவே படிப்படியாக நீக்க முடியும் எனவும் மேலும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (20)

# விளையாடுவோம் வாசிப்போம்
# சிறப்புற நடந்த நூல் அறிமுக விழா

(அலுவலக செய்தியாளர்)

விளையாடுவோம் வாசிப்போம நூல் அறிமுக விழா கிளிநொச்சி மகாவித்தியாலய மண்டபத்தில் தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வணபிதா பிரான்ஸ்சிஸ் யோசேவ் அடிகளார் தலைமையில் நேற்றுக்காலை 11.00 மணியளவில் நடைபெற்றுள்ளது.



எழுத்தாளர் முல்லை றிசானாவின் தொடக்கக் கல்வியில் வாசிப்பை ஊக்குவிக்கம் நோக்குடன் எழுதப்பட்ட விளையாடுவோம் வாசிப்போம் என்ற நூலின் அறிமுக விழாவில்

ஆரம்ப நிகழ்வாக பொதுச் சுடரினை நூலாசிரியரின் துணைவர் ஏற்றி வைக்க, தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையினைபாடசாலை அதிபரும் கல்வி மேம்பாட்டுப் பேரவை செயலாளருமாகிய வ.யோகநாதன் நிகழ்த்தினார்.

அடுத்து வாழ்த்துரைகளை மாகாணக் கல்வி திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணம், முல்லைத்தீவு வலயக கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா, ஜி.ரி.இசற் நிறுவனத்தைச் சேர்ந்த க.கந்தசாமி ஆகியோர் வாழ்த்துரைகளை நிகழ்த்தினர்.

தொடர்ந்து வெளியீட்டுரையினை வெ.இளங்குமரன் நிகழ்த்த நூலின் முதல் பிரதியினை செஞ்சோலை பொறுப்பாளர் செல்வி. ந.சுடர்மகளிடமிருந்து, தமிழ்ச்சங்க செயலாளர் பரமானந்தபிள்ளை பெற்றுக் கொண்டார்.சிறப்பு பிரதிகளும் வழ்ங்கப்பட்டன.

அடுத்து நூலின் மதிப்பீட்டுரையினை ஜி.ரி.இசற் நிறுவனத்தைச் சேர்ந்த செ.செல்வராசா, தமிழீழத் தேர்வு ஆணையாளர் க.சரவணபவன், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த சி.கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.ஏற்புரையினை நூலாசிரியர் முல்லை றிசானா நிகழ்த்தினார். இந்நூல்அறிமுக விழாவிற்கு முல்லை கல்வி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் மற்றும் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

### -தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால்-
# மீளவும் கடலை நோக்கிய திட்டத்தில் 40 கடற்றொழில் அ.அ.நியமனம்

ஏற்கனவே மீன்பிடித்துறையில் 'படகுகளைப் பழுதுபார்த்தல், மற்றும் கடன் வழங்கல் என்பனவற்றை நடைமுறைப்படுத்தி வந்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம், இப்போது விசேடமாக சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்வியலை மேம்படுத்தும் நோக்கில் மீளவும் கடலை நோக்கி என்ற துரித புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்துள்ளது. வடகிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களுக்கும் யாழ்.பல்கலைக்கழகத்தில் மீன்பிடித் தொழிலில் டிப்ளோமா பட்டம் பெற்ற நாற்பது பட்டதாரிகள் கடற்றொழில் அபிவிருத்தி அலுவலர் மற்றும் கள உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை 25.01.2005 அன்று தமிழர் புனர்வாழ்வுக்கழக கேட்போர் கூடத்தில் வைத்து இத்திட்டத்தின் முகாமையாளரும், நோர்வேயில் மீன்பிடி அபிவிருத்தித்துறையில் நீண்ட கால அனுபவம் பெற்றவருமான கே.சிவராஜா வழங்கினார். இத்திட்டத்திற்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர் சூசை ஆனந்தன் அவர்கள் அனுசரணையாக இருப்பார். இவற்றுக்கு பொறுப்பாக தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பணிப்பாளர் சி.வின்சன் இருப்பார். நியமனம் பெற்றவர்கள் உடனேயே அந்த அந்த மாவட்டத்தில் தமது பொறுப்புக்களை ஏற்க அனுப்பிவைக்கப்பெற்றனர்.

# இலவச கணினிப்பயிற்சி நிலைய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

லண்டன் ஸ்ரீகனக துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி உதவியுடன் தமிழீழ மாணவர் அமைப்பும், தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பும் இணைந்து இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலவச கணினிப் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு ராஜ்டொறின்சன் தலைமை வகித்தார். பிரதம விருந்தினர்களாக வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவனும், கிளி.இராமநாதபுரம் ம.வி. அதிபர்இரட்ணகுமாரும், கிளி அழகாபுரி வித்தியாலய அதிபர் நடராசாவும், கிளி. இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. வித்தியாலய அதிபர் புண்ணியமூர்த்தியும், டாக்டர் ஜெயராசாவும் கலந்து கொண்டனர். தமிழீழத் தேசியக் கொடியினை போராளி தளிர் ஏற்றி வைக்க, மங்கல விளக்கினை டாக்டர் ஜெயராசாவும், நிர்மலனும் ஏற்றி வைத்தனர். பின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நடைபெற்று இறுதியாக நன்றி உரையினை திருமதி. கார்த்திக் நிகழ்த்தினார். (12)

# இரு உந்துருளிகள் மோதியதில் மூவருக்குப் படுகாயம்

கடந்த புதனன்று காலை 8.30 மணிக்கு, உண்ணாப்புலவுக் கிராமத்தில் அதிவேகமாக எதிர் எதிராக வந்த இரண்டு உந்துருளிகள் மோதியதில் மூவர் படுகாயம் அடைந்து முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் உடன் அனுமதிக்கப்பட்டனர். கள்ளப்பாடு முல்லைத்தீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் - குமார் (வயது-35), மதுஷா (வயது-6), ஜீவன் (வயது-32) ஆகியோரே படுகாயம் அடைந்துள்ளனர். இவர்களில் சுப்பிரமணியம் -குமார் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்புகிராமிய வைத்தியசாலையில் மறுதினம் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (20)

# 12 ஈழத்தமிழ் அகதிகள் நேற்று தாயகம் திரும்பினர்

இந்தியா, கோயம்புத்தூர், மதுரை மாவட்டங்களைச் சேர்ந்த ஆழியார் திருவாதவூர் ஆகிய அகதி முகாமைச் சேர்ந்த 05 பெண்களும் 07 ஆண்களும் தாயகம் திரும்பியுள்ளார்கள். இவர்கள் இராமேஸ்வரத்தில் இருந்து சிறிய படகு மூலம் தலை மன்னார் வந்தடைந்து தலை மன்னார் கடற்படையில் சரணடைந்துள்ளனர். இவர்களை தலை மன்னார் பொலிசார் நேற்று மன்னார் விசேட நீதிமன்றில் முன் நிறுத்தினர். அவர்களை மன்னார் நீதிபதி எம்.எம் அப்துல்லா அவர்கள் அவர்களின் சொந்த இடமான வவுனியா தவசிகுளம், வவுனியா சுந்தரபுரம், திருமலை லிங்க நகர் ஆகிய இடங்களுக்கு மன்னார் நகர கிராம உத்தியோகத்தர் மூலம் அனுப்பி வைத்துள்ளார். (18)

### நீர் சுத்திகரிப்பு இயந்திரம்

மட்டக்களப்பின் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் சுனாமியின் பின்னர் நீரில் ஏற்பட்டுள்ள மாசுறலை நிவர்த்திக்கும் முகமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திற்கு இத்தாலிய செஞ்சிலுவைச் சங்கம் நீரை சுத்திகரிக்கும் இயந்திரங்களை வழங்கியுள்ளது.

இந்த இயந்திரம் மூலம் ஒரே நேரத்தில் 5000 லீற்றர் நீரை சுத்திகரிக்க முடியுமென தெரிவிக்கப் படுகிறது.

# மீன்பிடிப் படகுகளுக்கான எரிபொருளுக்கு சலுகை வழங்க அரசாங்கம் தீர்மானம்

மீன்பிடிப் பட்குகளுக்காக எரிபொருளுக்கு சலுகைகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடல் பேரலையின் தாக்கத்தின் பின்னர் மேற்கொள்ளப்படும் முதலாவது கடல் பயணத்திற்கு சாதாரண படகுகளுக்குத் தேவையான முழுமையான எரிபொருளை இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கடல்தொழில் நீரியல்வள அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் ஆழ்கடல் மீன்பிடிப் படகு ஒன்றின் முதலாவது கடல் பயணத்திற்காக ஒரு லீற்றர் டீசலுக்கு 12 ரூபா சலுகை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய செயற்திட்டத்தின் கீழ் ஆழ்கடல் மீன்பிடிப் படகு ஒன்றிற்கு சுமார் 30 ஆயிரம் ரூபா நிதியுதவி கிடைக்கும் எனவும் கடல்தொழில் நீரியல்வள அமைச்சு தெரிவிக்கின்றது.

இந்த சலுகையை வழங்குவதற்காக அரசாங்கம் 62 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளதாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்து.

# கட்டாக்காலி கால் நடைகளால் பயிரழிவு தொடர்கின்றது

(கிளிநொச்சி)

திருவையாறு பகுதியில் கட்டாக்காலி கால் நடைகளால் விவசாயிகள் தொடர்ந்தும் பயிரழிவுகளை சந்தித்து வருகின்றனர். திருவையாறு, சாந்தபுரம், அம்பாள்நகர் பகுதி குடியிருப்பாளர்கள் கூடுதலாக தமது ஜீவனோபாய தொழிலாக விவசாயத்தையே மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் கட்டாக்காலி கால் நடைகளால் தாம் தொடர்ந்தும் பயிரழிவை சந்தித்து வருவதாக கவலை தெரிவித்துள்ளனர். எனவே சம்பந்தப்பட்ட கால் நடை வளர்ப்போர் தமது கால் நடைகளை கட்டுப்படுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (15)

# விசேட மருத்துவ சிகிச்சையும் ஆலோசனைகளும்

அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருக்கும் பெண் ஆரோக்கிய மகப்பேற்று நிபுணரான வைத்தியகலாநிதி சாமுவேல் M.B.B.S (cey), M.D (U.S.A) M.R.C.O.G (LONDON), F.A.C.D.G (U.S.A) அவர்களால் புதுக்குடியிருப்பு டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த (தனியார்) மருத்துவ மனையில் இன்றிலிருந்து 05.02.2005 சனிக்கிழமை வரை காலை 8.30 இலிருந்து மாலை 3 மணிவரை ஆலோசனையும் சிகிச்சையும் வழங்கவுள்ளார். பயன்பெற விரும்பும் நோயாளிகள் முன் கூட்டியே பதிவு செய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

# பாதிக்கப்பட்ட மாணவர்கள் இலவசமாகக் கற்கலாம்

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் வாழும் 5ஆம் ஆண்டு தொடக்கம் 12 ஆண்டு வரையான முல்லைத்தீவு மாணவர்கள் அனைவரும் தண்ணீரூற்றில் உள்ள முல்லைக் கல்வி நிலையத்தில் தங்கள் கல்வியை இலவசமாக தொடர முடியுமென கல்வி நிலைய நிர்வாகி தெரிவித்தார்.

எனவே மாணவர்கள் தங்கள் கல்விகளை தொடருமாறும் கேட்டுக் கொள்கின்றார். (20)



ஈராக்கில் இன்று பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் பாக்தாத்தில் சோதனையில் ஈடுபட்டுள்ள அமெரிக்கப்படையினர்.

## அமெரிக்கப்படையை திரும்பப்பெறவேண்டும்

-எட்வர்ட் கென்னடி

ஈராக்கில் இருந்து அமெரிக்க இராணுவம் திரும்பப் பெறப்பட வேண்டும் என்று செனட் உறுப்பினரும், முன்னாள் சனாதிபதி கென்னடியின் தம்பியுமான எட்வர்ட் கென்னடி வலியுறுத்தி இருக் கிறார்.


சனநாயகக் கட்சியைச் சேர்ந்த மாசா சூட்ஸ் செனட் உறுப்பி னரான கென்னடி நிருபர்களிடம் கூறியதாவது:- ஈராக்கில் தேர்தல் முடிந்ததும், உடனடியாக குறைந்த பட்சம் 12 ஆயிரம் வீரர்களை யாவது திரும்பப் பெறவேண்டும். அதோடு இராணுவத்தை முழுமையாகத் திரும்பப் பெற இருப்பதாக சனாதிபதி புஷ் அறிவிக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.



1989ஆம் ஆண்டில் பலியான சீன சனநாயக வாதியான சாவோ சியாங்கின் புகைப்படத்தைத் தாங்கியவாறு அவரின் கல்லறைக்கு வெளியே கதறியழும் சீன வயோதிபப் பெண்மணி.

# புதிய ஈராக்கிய அரசு கேட்டுக்கொண்டால் அமெரிக்கா ராணுவத்தை திரும்பப் பெறும்

## -ஜோர்ஜ் டபிள்யு புஷ்




(நியூயோர்க்)

**"தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கும் புதிய ஈராக் அரசு, கேட்குமானால் இராணுவத்தை அமெரிக்கா திரும்பப் பெறும்" என்று சனாதிபதி புஷ் அறிவித்துள்ளார்.**

**புஷ் நியூயோர்க் டைம்ஸ் நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறி இருப்பதாவது:-**

இன்று நடக்க இருக்கும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் புதிய ஈராக் அரசு, இராணுவத்தை வாபஸ் பெறும் படி எங்களைக் கேட்குமானால், உடனடியாக திரும்பப் பெறுவோம்.

சனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் ஒன்று கூடிப்பேசி, எங்கள் இராணுவம் தொடர்ந்து நீடிக்க வேண்டும் என்று தீர்மானிப்பார்கள் என்று நம்புகிறோம். ஈராக்கியர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு வலிமை பெறும்வரை அமெரிக்க இராணுவம் அங்கு நீடிக்க வேண்டிய அவசியம் உள்ளது. அதை ஈராக் தலைவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். ஆனால் ஈராக் அரசு, இராணுவத்தை வாபஸ் பெறும்படி கோரினால் அதை ஏற்றுச் செயற்படுவோம், ஏனெனில் புதிய ஈராக் அரசு தன் நாட்டு மக் களிடம் இறையாண்மை பெற்று உள்ளது.

புதிய சரித்திரம் படைக்கப் பட்டு வருகிறது. இந்த சரித்திரம் உலகத்தை மாற்றப்போகிறது. பல ஈராக்கியர்கள் அமெரிக்காவை ஆக்கிரமிப்பு நாடாகப் பார்க்கிறார்கள். ஆனால் பெரும்பான்மையான ஈராக்கியர்கள் அமெரிக்காவை உதவி செய்ய வந்த நாடாகவே கருதுகிறார்கள்.

ஈராக்கியர்களிடம் உள்ள தேசிய உணர்வை நான் மதிக்கிறேன். வன்முறை சம்பவங்கள் நடக்காத பகுதிகளின் பாதுகாப்பை ஈராக் படைகள் வசம் ஒப்படைக்க வேண்டும் என்று இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயர் கூறி இருக்கிறார் இதை நான் வரவேற்கிறேன்.

அமெரிக்க இராணுவம் வெளியேறுவதற்கு முன்பு நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் நிறைய உள்ளன என்றும் புஷ் தெரிவித்தார்.



அமெரிக்காவின் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த இளம் பெண் கேட்லின் ஹக்சின்ஸ் பாடசாலையில் படிக்கும் போதே மூளை புற்று நோயால் பாதிக்கப்பட்டு வந்த ஹக்கின்ஸ் அதையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து படித்து வந்தார். எப்படியாவது பட்டம் பெற வேண்டும் என்பதே அவரது இலட்சியம். அவரது கனவு நிறைவேறியது. கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் அவர் பள்ளிக் கல்வியை வெற்றிகரமாக முடித்து பட்டமும் பெற்றார். பெல் கல்வி நிலையத்தில் நடந்த இந்த நிகழ்ச்சியில் கவர்னர் ஜெப் புஷ் அவருக்கு பட்டம் வழங்கினார். 17 வயதே ஆன கேட்லின் ஹக்கின்ஸ் இப்போது உயிருடன் இல்லை. 2 நாட்களுக்கு முன் அவரது உடல் நிலை மேலும் மோசம் அடைந்தது. சிகிச்சை பலன் இன்றி ஹக்கின்ஸ் இறந்து விட்டார்.



ஆசே கிளர்ச்சிவாதிகளிற்கும் இந்தோனேசிய அரசிற்குமிடையில் பேச்சுக்கள் நடை பெறலாம் என்ற செய்தியைக் கொண்ட செரபி இந்தோனேசியா என்ற செய்தியை வாசிக்கும் இந்தோனேசியப் படை வீரர்.

# அந்தமானில் நேற்றும் நில நடுக்கம் இரு தினங்களில் 16 நடுக்கங்கள்

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட பெரிய நில நடுக்கத்துக்குப் பிறகு தினமும் சிறுசிறு சில நடுக்கங்கள் ஏற்பட்டுள்ளது. கடந்த 2 தினங்களில் மட்டும் சுமார் 16 தடவை பெரிய நில நடுக்கம் ஏற்பட்டது.

இதனால் பீதி அடைந்த மக்கள் வீடுகளைக் காலி செய்து விட்டுத் தெருக்களில் தஞ்சம் அடைந்தனர். நூற்றுக்கணக்கானவர்கள் இன்னமும் தெருக்களிலேயே உள்ளனர்.

இந்த நிலையில் நேற்று அதிகாலை மீண்டும் நிக்கோபார் தீவை நில நடுக்கம் தாக்கியது. 5.4 ரிக்டர் அளவுக்குப் பதிவான இந்த நில நடுக்கத்தால் கார் நிக்கோபார் தீவின் கிழக்கு கடலோரப் பகுதி கடுமையாகக் குலுங்கியது.

இதனால் மக்களிடையே பீதி அதிகரித்துள்ளது. அந்தமான், நிக்கோபார் தீவுகளை விட்டு மக்கள் வெளியேறுவதும் அதிகரித்துள்ளது.

அந்தமானில் ஏற்படும் தொடர்ச்சியான நில நடுக்கத்தை முதலில் நிபுணர்கள் சாதாரணமாகத்தான் நினைத்தனர். ஆனால் அங்கு நில நடுக்கமும், அதிர்வும் அதிகரிப்பதால் நிபுணர்கள் அச்சம தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம் பெற்ற சுனாமி அனர்த்தத்தில் பெரும் அழிவைச் சந்தித்த தெற்காசிய மக்கள் அனர்த்தத்தில் இருந்துமீளாத நிலையில் தொடர்ந்தும் நில நடுக்கம் அச்சத்திற்குள்ளாக்கியுள்ளது.

# பாரபட்சமின்றி செயற்படுவதில் பி.பி.சி தொலைக்காட்சி தோல்வி

(லண்டன்)

பாரபட்சமில்லாமல் செய்திகளைத் தர வேண்டும் என்ற தமது நோக்கில் பி.பி.சி தொலைக்காட்சி மற்றும் வானொலி தோல்வியடைந்து விட்டதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது.

இந்த ஆய்வை நடத்துவதற்கான பொறுப்பைத் தனியார் அமைப்பிடம் ஒப்படைத்திருந்தது பி.பி.சி அந்த ஆய்வில் குறிப்பிடப் பட்டுள்ள விபரங்கள், ஐரோப்பிய விவகாரங்கள் தொடர்பான செய்திகளை அளிப்பதில் பாரபட்சமற்ற முறையில் செயற்படாததால் பெரிய சிக்கல் எழுந்துள் ளது.

ஐரோப்பிய விவகாரங்களில் வேண்டுமென்றே பாரபட்சத்துடன் பி.பி.சி செயற்படுவதாகக் கூற முடியாது. சில கலாசார முறைகளின் தாக்கமும் உள்நோக்கமற்ற பாரபட்சமும் இருக்கிறது.

ஐரோப்பிய யூனியன் விவகாரங்கள் குறித்து செய்திகளை அளிப்பதில் மேலும் முன்னேற்றம் காண வேண்டும் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இறுதியாக பி.பி.சி செய்தியாளர்களிடத்தில் நிலவும் அறியாமையும் உடனடியாகப் களையப்பட வேண்டும் எனவும் அறிக்கை தெரிவிக்கிறது.

# 55ஆண்டுகளுக்குப் பின்னர் முதல் முறையாக சீனா - தாய்வானுக்கிடையில் விமான சேவை



சீனாவுக்கும், தாய்வானுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாகவே பதற்றம் அதிகரித்து வந்தது. சீனாவின் ஒருங்கிணைந்த பகுதி தான் தாய்வான் என்கிறது சீனா, சுயாட்சி அதிகாரத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். தனி நாடாக அறிவித்தால் இரா ணுவ நடவடிக்கை எடுப்போம் என்றும் சீனா எச்சரிக்கை விடுத் தது.

இந்த நிலையில் சமரச முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக சீனாவில் இருந்து ஜியாமென் ஏர்லைன்ஸ் சார்பில் தாய்வானுக்கு விமான போக்குவரத்து தொடங்குகின்றது. 55 ஆண்டுகளுக்குப் பிறகு முதல் தடவையாக நேற்று முதல் தாய்வானுக்கு சீன விமானம் செல்கிறது. அந்த விமானத்தில் செல்லும் விமானப் பணிப்பெண்கள் மாதிரி விமானத்துடன் போஸ் கொடுக்கும் காட்சி.

# கைதிகளிடம் உண்மையைப் பெறுவதற்கு சிறையில் பெண் விசாரணை அதிகாரிகள்

கைதிகளிடம் இரக்கம் காட்டலாம். கவர்ச்சி காட்டலாமா? ஈராக் போரில் சிறை பிடிக்கப்பட்ட கைதிகளை அமெரிக்கா குவாந்தனாமோ கடல் பகுதியில் உள்ள தீவுச்சிறையில் அடைத்து இருக்கிறது. அந்த கைதிகளிடம் சில உண்மைகளை வரவழைக்க இராணுவ அதிகாரிகள் என்னென்னவோ முயற்சிகளை மேற்கொண்டனர். சித்திரவதை செய்தும் கூட உண்மைகளை கறக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து புதிய உத்தியை அமெரிக்கா கடைப்பிடிக்கத் தொடங்கி இருக்கிறது.

சிறையில் கைதிகளிடம் விசாரணை நடத்த பெண் அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்கள். அந்தப் பெண் அதிகாரிகள் கவர்ச்சியாக 'சிறிய ஆடைகளை' அணிந்து வந்து கைதிகளிடம் விசாரிக்கிறார்கள். தொட்டுத் தொட்டு பேசி கைதிகளிடம் கேள்வி கேட்கிறார்கள்.

கொஞ்சும் பார்வையில் செக்ஸியாகப் பேசி கைதிகளை மயக்கப் பார்க்கிறார்களாம். சித்திரவதையில் வெளிவராத உண்மைகள் 'செக்ஸ்' லீலைகளில் வெளிவரலாம் என்பது அமெரிக்காவின் கணிப்பு உண்மைகள் வெளிவந்ததா? இல்லையா? என்பது தெரியவில்லை.



அமெரிக்க கடற்படைக்குச் சொந் தமான Ch-53E சுப்பர் ஸ்ராலியன் உலங்கு வானூர்தி ஈராக் - சிரியா எல்லைக்கு அண்மை யாகப் பறக்கிறது.


சுவிஸில் நினைவு நிகழ்வில்


நோர்வேயில்

## சுனாமி ஆழிப் பேரனர்த்தத்தின் ஒருமாத நிறைவு
## நோர்வே, சுவிஸ் வாழ் தமிழர்களால் நினைவு கூரல்

**கடற்புவி நடுக்கம் ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்த ஒருமாத நினைவு நாள் தமிழர்கள் வாழும் ஐரோப்பிய நாடுகளில் அனுஷ்டிக்கப பட்டன. அந்த வகையில் கடந்த 26 ஆம் திகதி நோர்வேயிலும் மற்றும் சுவிஸிலும் நினைவு நிகழ்வுகள் இடம்பெற்றன.**

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்த 31ஆவது நாள் (26.01.2005) தமிழீழ விடு தலைப புலிகளால் தேசிய துக்க தினமாக பிரகடனப்படுத்தப் பட்டது. ஆழிப் பேரலையால் தமிழர் தாயகம், சிறிலங்கா உட்பட தெற்காசியப் பிராந்தியம் மற்றும் உலக நாடு களைச் சேர்ந்த உயிர்நீர்த்த அனைத்து மக்களையும் நினைவு கூர்ந்து கடந்த 26 ஆம் திகதி ஒஸ்லோவில் நினைவுக்கூட்டம் இடம்பெற்றது. இந்நினைவேந்தல் கூட்டம், அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட றொம்மன் வளாகத்தில் மாலை 7 மணி முதல் 8 மணி வரை இடம்பெற்றது. முதலில் உயிர்நீர்த்த மக்களுக்கான பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டது. பொதுச்சுடரினை தாய்கத்திலிருந்து வருகை தந்திருக் கும் . ஒளிவீச்சு பொறுப்பாளரும் கவிஞருமான திரு வீரா ஏற்றி வைத்து, நினைவுரையும் ஆற்றி னார்.

தொடர்ந்து அலை பறித்த மக்களின் நினைவு தாங்கிய விருத் தப்பாடல், கவிதைகள், நினைவு ரைகள் என்பன இடம்பெற்றன. அலையால் அள்ளப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து சுடரேற்றி, உறவு களை இழந்து அல்லலுறும் மக்களின் துயர்களில் பங்கு கொள்கின்றோம் என்பதற்கான கூட்டமாக இது அமைந்ததோடு, தமிழ் மக்கள் முன்னுள்ள அடுத்த கட்டப் பணி களை வீச்சாக்குவதற்கானதும் எமது மக்களை துரித கதியில் இயல்பு வாழ்வுக்குள் இட்டுச் செல்வதற்கான பணிகளுக்கு அந்த மக்களின் சாவு மீது உறுதி யெடுத்துக் கொள்கின்றதென்ற வகையில் இந்நினைவுக் கூட்டம் அமைந்தது.

ஆழிப்பேரலையால் 26.12.2004 இல் உயிரிழந்த அனைத்து ஈழத் தமிழ் மக்களுக்குமாக கடந்த 26 ஆம் திகதி சுவிசில் பல மாநிலங் களிலும் புலம்பெயர் வாழ் தமிழ் மக்களினால் தேசிய துக்கதினம் நினைவு கூரப்பட்டது. இங்கு அக வணக்கம், சுடர் ஏற்றல், மலர் வணக்கம், உரைகள் போன்றவை இடம்பெற்றன. இந் நிகழ்வுகள் குறிப்பாக பாடசாலை கள், தமிழர் இல்லங்கள், மன்றங்கள், அத்தோடு ஆலயங்களிலும் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அகவணக்க நிகழ்வு கள் நடைபெற்றன. சுவிஸ் தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்ட னர்.

## பால் கொள்வனவு நிலையமொன்றை உடையார்கட்டில் அமைக்கக் கோரல்

(கிளிநொச்சி)

முல்லை-உடையார்கட்டுப் பகுதி யில் பால் கொள்வனவு நிலையம் இன்மையால் இப்பகுதிக் கால் நடை வளர்ப்போர் மிகுந்த இடரினை எதிர் கொண்டு வருகின்றனர்.

உடையார்கட்டுப் பகுதியில் கூடுதலான மக்கள் கால் நடை களை வளர்த்து வருகின்றனர். இம் மக்களிற்கு கிடைக்கும் பாலினை விற்பனை செய்வதற்கு புதுக்குடி யிருப்பில் அமைந்துள்ள பால் கொள்வனவு நிலையத்திற்கே கொண்டு செல்ல வேண்டியுள்ளது. இதனால் பால் பழுதடைவதுடன், நடைமுறை ரீதியான பிரச்சினை களையும் எதிர் நோக்கி வருகின்ற னர்.

எனவே உடையார் கட்டுப் பகுதியில் பால் கொள்வனவு நிலையம் ஒன்றினை அமைப்பத னூடாக இக் குறைபாட்டினை நீக்கலாம் என இப்பகுதிக் கால் நடை வளர்ப்போர் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கின்றனர். (15)

## மலேரியா தடைமருந்து விசிற அனைவரின் ஒத்துழைப்பும் தேவை!

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பிரதேசத்தில் மலேரியாத்தடை மருந்து மலேரியா தடைப்பகுதியினரால் விசிறப்பட்டு வருகின்றது.இம் மலேரியா தடை மருந்தை எல்லா வீடுகளுக்கும், ஆலயங்கள், வைத்திய நிலையங்கள் எல்லாவற்றிற்கும் கட்டாயமாக தெளிக்கப்படுதல் வேண்டும் எனவும் மலேரியா நோயில் இருந்து மக்களை விடுவிக்கும் பொருட்டே இம் மருந்து தெளிக்கப்படுவதாகவும் இத்தடைமருந்து தெளிப்பதற்கு சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென மலேரியா தடைப்பகுதியினர் கேட்டுள்ளனர். (12)

## சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த வலியுறுத்து

(மல்லாவி)

துணுக்காய்ப்பிரதேச சபையின் அனுமதியின்றி கோட்டை கட்டியகுளம், ஐயன்குளம் பகுதிகளில் சட்டவிரோதமாக மணல் அகழ்வதால் மேற்படி வீதிகளின் அருகே குன்றும் குழியுமாக இருந்து வருகின்றன. இதனால் இக்கிராம வீதிகளில் பயணங்களை மேற்கொள்ள முடியாமல் மக்கள் பல சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர். இதற்கு சம்பந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (24)

## கேணல் கிட்டு உட்பட 10 வேங்கைகள் நினைவு நாள் நெதர்லாந்தில் அனுஷ்டிப்பு

நெதர்லாந்தில் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட 10 வீரவேங்கைகளின் 12ஆம் ஆண்டு நினைவு நாள் பிறாபன்ற் மாநிலத்தில் அவுடன்பொஸ் நகரில் சனவரி 23ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை எழுச்சிகர மாக நினைவுகூரப்பட்டது. பிற்பகல் 2.15 மணிக்கு பொதுச்சுடரினை கிளைப்பொறுப்பாளர் ஏற்றிவைக்க தேசியக்கொடியினை தாயகத்திலிருந்து வருகை தந்திருந்த லெப். கேணல் இராஜன் இராணுவப் பயிற்சிக்கல்லூரியின் ஆசிரியர் நிலவன் மாஸ்ரர் ஏற்றிவைத்தார். தொடர்ந்து விசேடமாக அமைக்கப் பட்டிருந்த 10 மாவீரர்களின் உருவப் படங்களிற்கான ஈகச் சுடரேற்றல்களை மாவீரர் குடும்பங்களும், நெதர்லாந்து செயற்பாட்டாளர்களும் ஏற்றிவைத்தனர். இதனைத் தொடர்ந்து மண்டபத்தில் விசேடமாக அமைக்கப்பட்டிருந்த ஆழிப்பேரலையில் உயிர் நீத்தவர்களிற்கான நினைவுச்சுடரினை தமிழ் இளை யோர் அமைப்பின் நெதர்லாந்துப் பொறுப்பாளர் செல்வன் பாபு ஏற்றிவைக்க அங்கு வந்திருந்த மக்கள் அனைவராலும் நினைவுச்சுடர்கள் ஏற்றிவைக் கப்பட்டன.



## பொருளியலில் முது மெய்யியல் மாணிப் பட்டம் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)



கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்ப் பாசன விவசாயமும் நீர் முகா மைத்துவமும் எனும் தலைப்பில் ஆய்வுகளை மேற் கொண்டமைக்காக அ.கேதீஸ்வரன் அவர்களுக்கு பொருளியலில் முதுமெய்யியல் மாணிப் பட்டம் கிடைக்கப் பெற் றுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வவுனியா வளாக வியாபார கற்கைகள் பீடாதிபதி அவர்களின் வழிகாட்டலில் மேற்படி ஆய்வு மேற்கொள்ளப்பெற்றது.


கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தின் அபிவிருத்தி அலு வலராக இவர் பணியாற்றி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இரவுவேளை வீதி ரோந்து நடவடிக்கை

(கிளிநொச்சி)

வட்டக்கச்சி காவல் பணிமனை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசங் களில் குற்றத்தடுப்பு நடவடிக்கை தொடர்ந்தும் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.இதனடிப்படையில் வட்டக்கச்சி காவல் பணிமனைப் பொறுப் பதிகாரி கிங்ஸ்சிலிதாஸ் தலைமையிலான காவல்துறையினர் இரவு நேர வீதி ரோந்து நடவடிக்கையிலும், குற்றச் செயல்களை இனங்காணும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளனர். (15)

## நவீன சூடடிக்கும் இயந்திரம் கிளிநொச்சியில் அறிமுகம்




(அலுவலக செய்தியாளர்)

நெல் அறுவடை மற்றும் சூடடிப்பிற்கு இணைந்த நவீன இயந்திரம் கிளிநொச்சி மாவட் டத்தில் முதன்முறையாக அறி முகம் செய்து வைக்கப் பெற்றுள் ளது. கடந்த காலங்களில் வேளாண் செய்கையில் பெருத்த சவாலாக விருந்த அறுவடை சூடடிப்பிற்குத் தீர்வுகாணும் வகையில் வன்னி வேளாண் தொழில் நுட்ப நிறு வனத்தினரால் மேற்படி இயந்திரம் இறக்குமதி செய்யப் பெற்று கடந்த 27 ஆம் திகதியன்று விவசாயி களுக்கு அறிமுகம் செய்து வைக் கப்பெற்றது.மேற்படி பொறியானது நாளொன்றிற்கு ஆறு ஏக்கர் வயல் நெற்கதிரினை வெட்டிச் சூடடிக்கும் திறன் கொண்டதென்பது குறிப்பி டத்தக்கது. (சோ)

# இந்திய இராஜதந்திரத்தை அடித்துச் சென்ற 'சுனாமி'

**தெற்காசியப்** பிராந்தியத்தில் அனர்த்தத்தை விளைவித்த சுனாமியினால் ஏற்பட்ட அரசியல் தாக்கம் புவிசார் அரசியலில் ஏற்படுத்திய விளைவுகள் தொடர்பான உணர்வுகள் படிப்படியாக வெளிவரத் தொடங்கி விட்டன. இவ் உணர்வுகள் வெளிப்படுவது தவிர்க்கமுடியாதவையே ஆகும். ஏனெனில் புவிசார் அரசியலில் சுனாமி அரசியல் ஏற்படுத்திய தாக்கம் பெரியதாகும். சுருக்கமாகக் கூறுவதானால், தெற்காசியப் பிராந்தியத்தின் இராணுவ சமநிலையை மாற்றிவிடக் கூடிய அளவிற்கு அதன் தாக்கம் உள்ளது.

சுனாமியினால் தென்கிழக்காசிய நாடுகள் பாதிப்புற்ற போது இந்தியாதான் இப்பிராந்தியத்தின் (இந்து சமுத்திர பிராந்தியத்தின்) வல்லரசு என்ற எண்ணப்பாட்டுடனேயே செயற்பட்டது. இதன் வெளிப்பாடே பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு நிவாரணம் மட்டுமல்ல, மீட்புப்பணிக்கென தனது கடற்படைக் கப்பல்களையும், உலங்குவானூர்திகளையும், இராணுவத்தினரையும் அனுப்பி வைத்தது. அத்தோடு இந்தியாவில் ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு உலக நாடுகள் நிவாரண உதவிகளை வழங்க முன்வந்தபோதும் தம்மாலேயே தமது இழப்பை ஈடுசெய்ய முடியும் என்ற ரீதியில் நிவாரண உதவிகளையும் இந்தியா ஏற்க மறுத்து விட்டது.

ஒரு வகையில் பார்த்தால் இந்திய அரசு தனது நாட்டில் மேற்கொள்ள வேண்டியதான நிவாரணப் பணிகளையும் ஓரம் தள்ளிவிட்டு, அண்டைய நாடுகளுக்கு நிவாரண உதவிகளை உணவுப் பண்டங்கள், நிதி, ஆளணி என்ற ரீதியில் உதவ முன்வந்தமைக்கு காரணம் சுனாமியினால் ஏற்பட்ட அனர்த்தத்தை ஏனைய நாடுகள் - குறிப்பாக மேற்குலக வல்லரசுகள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி இப் பிராந்திய அரசியலில் தலையீடு செய்வதை நிறுத்துவது அல்லது மட்டுப்படுத்துவது என்ற நோக்கத்தின் அடிப்படையிலேயே ஆகும்.

ஆனால் இந்தியாவின் இத்தகைய எதிர்பார்ப்பு தோல்வியில் முடிவுற்றது என்பதே உண்மையாகும். அத்தோடு இச்சுனாமி அரசியல் தொடர்பான இராஜதந்திர செயற்பாட்டை இந்தியா திறம்பட்ட முறையில் கையாளவும் இல்லை. இவ்வாறான நிலைமை தோன்றியமைக்கு இத்தகையதொரு சந்தர்ப்பத்தை எவ்வாறு தமது நலனுக்குப் பயன்படுத்த முடியும் என மேற்குலக வல்லரசுகள் ஏற்கனவே அனுபவரீதியில் புரிந்து கொண்டு இருந்தமையும், சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட சேதம் மிக உயர்வாக இருந்தமையுமே காரணமாகும்.

சுனாமி தாக்கியதும் இலங்கைக்கெனப் பெரும் நிவாரண உதவிகளை இந்திய அரசு அறிவித்ததோடு விரைந்தும் செயற்பட்டது. இந்தியாவின் சரக்குக் கப்பல்களும், கடற்படை கப்பல்களுமே சுனாமிக்குப் பின்னர் இலங்கை வந்தடைந்த முதலாவது நிவாரணக் கப்பல்களாக இருந்தன.

இவ் விரைந்த செயற்பாட்டின் மூலம் சிறிலங்கா அரசை தனது பிடிக்குள்/ கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்து விடலாம் என்றே இந்தியா கருதியது. ஆனால், வழமைபோலவே இந்தியாவுடன் கலந்து போசாமலே- ஏன் இந்தியாவிற்கு அறிவிப்புச் செய்யாமலே அமெரிக்க போர்க்கப்பல் இலங்கைத் துறைமுகங்களுக்குள் பிரவேசிக்கவும், அமெரிக்க இராணுவ விமானங்கள் விமானத் தளங்களில் தரையிறங்கவும் சிறிலங்கா அரசால் அனுமதிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து பாகிஸ்தான் உட்பட பல நாட்டுப் போர்க்கப்பல்கள், விமானங்கள் இராணுவ, கடற்படை சிப்பாய்கள், சிறிலங்காவிற்குள் பிரவேசித்தன. இது ஒரு வகையில் இப்பிராந்தியத்தின் இராணுவச் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தி தம்மிடம் உள்ளதென இந்தியாவிற்கு மேற்கு நாடுகள் உணர்த்திய / வெளிப்படுத்திய சம்பவம் எனக் கொண்டாலும் தவறாக மாட்டாது.

அமெரிக்கத் துருப்புக்கள் இலங்கையில் தரையிறங்கியதும், இது குறித்து இந்திய அரசு விசனம் அடைந்திருப்பதாகவும், சிறிலங்கா அரசிற்கு சில அறிவித்தல்களைச் செய்ததாகவும் தகவல்கள் வெளிவந்தபோது சிறிலங்கா அதனை மறுத்தது. அமெரிக்க வருகை இந்தியாவுடனான இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டதானதொரு தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது.

ஆனால் தற்பொழுது வரும் தகவல்களின் படியும், இந்தியத்தரப்பில் இருந்து வெளிப்படுத்தும் கருத்தின் அடிப்படையிலும், அமெரிக்கஇராணுவத்தினரின் வருகை குறித்து சிறிலங்கா அரசு இந்தியாவிற்கு தெரியப்படுத்தவில்லை என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. அதாவது இந்தியாவுடன் ஆலோசனையோ அன்றிப் கருத்துப்பரிமாற்றமோ இன்றி அமெரிக்கத் துருப்புக்கள் வருகைக்கு சிறிலங்கா அரசு அனுமதி வழங்கியிருந்தது. இதனை வெளிப்படுத்துவது போன்றே இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங்கின் பேட்டியும் அமைந்திருந்தது. "இரண்டு நாடுகளும் கலந்தாலோசித்த பின்னர் யார் வேண்டுமானாலும் இலங்கைக்கு உதவி செய்திருக்கலாம்." என்ற நட்வர்சிங்கின் கூற்றுக்கள் இந்தியா இதில் ஓரம் கட்டப்பட்டு இருந்தது என்பதையே வெளிக்காட்டுவதாக இருந்தது.

இந்த வகையில் சர்வதேச நாடுகளுடனான இராஜதந்திர போட்டியில் இந்தியா பின்னடைவைச் சந்தித்த அதே வேளை, இலங்கையின் உள்நாட்டு அரசியலிலும் இந்தியாவின் அணுகுமுறை தோல்வி கண்டுள்ளது. ஏனெனில், சுனாமி அரசியலின் பின்னணியில் ஏற்படக்கூடிய அன்றி பயன்படுத்திக்கொள்ளக் கூடியதான மிகப் பெரிய அரசியல் வாய்ப்பினை இந்திய இராஜதந்திரிகள் வெற்றிகரமாக கையாளவில்லையென்றே கூறலாம்.

கடந்த நூற்றாண்டின் 90 களின் ஆரம்பத்திலிருந்து இலங்கை தொடர்பான இராஜதந்திர செயற்பாட்டில் இந்தியா பெரிதாக எதனையும் சாதித்துக் கொண்டதாக இல்லை. ஒரு மந்த நிலையிலேயே அது இருந்தது. மாறாகத் தவறானதொரு வழிமுறையைக் கைக்கொண்டது என்றே கூறலாம். அதிலும், இனப்பிரச்சினை தொடர்பான அதன் இராஜதந்திரமானது உணர்ச்சிகளின் அடிப்படையிலானதாக இருந்ததே ஒழிய -மதிப்பிடத்தக்க மதிநுட்பத்துடனும், தேச நலனுடனும் கூடியதாகவும் இருக்கவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்திருந்த இந்திய அரசு இலங்கையின் தமிழ் மக்கள் தொடர்பான அணுகுமுறையில் பெரும் தவறிழைத்திருந்ததென்பது வெளிப்படையானது.

இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு காணப்படுதல் வேண்டும் எனக் கூறிய இந்திய அரசின் நடவடிக்கைகள் சம நிலையானதாக இருக்கவில்லை. சிறிலங்கா அரசுக்கு சார்பாகவே இருந்தது.

மறுபுறத்தில் தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறாகச் செயற்படுபவர்களையும், சிறிலங்கா அரசின் கைக்கூலிகளாகச் செயற்படுபவர்களையும் கொண்டே தமிழ் மக்களை அணுகவும் இந்தியா முனைந்துள்ளது. அதாவது தமிழ்மக்களிடமிருந்து அந்நியப்பட்டுப் போயுள்ள சக்திகளை தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக இந்தியா முயன்று கொண்டிருந்தது.

அதுமட்டுமன்றி இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்பாக இந்தியாவிற்கு இதில் உரிய பங்கை வழங்குவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் தயாராகவே இருந்தது. இதன் காரணமாகவே விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் இந்தியா ஊடாகப் பயணம் செய்வதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கைகளும் விடுக்கப்பட்டது.

ஆனால் இந்திய மத்திய அரசும் சரி, தமிழக அரசும் சரி இலங்கையின் களநிலவரம், இலங்கை தொடர்பாகச் சர்வதேச நாடுகளின் பார்வையில் ஏற்பட்டு வரும் மாற்றம் விடுதலைப்புலிகள் விடயத்தில் அவர்களின் அண்மைக்காலப் போக்கு என்பன போன்ற எதிலுமே கவனம் செலுத்தவில்லை. இராஜதந்திர நகர்வுகளை ஏதோவொரு வரையறைக்குள் உட்பட்டது போன்றதாகவே இலங்கை விவகாரத்தை இந்தியா கையாண்டது.

இவ்வாறு இந்தியா கையாண்டமைக்கு வறட்டுத்தனம் பொருந்திய சில இராஜதந்திரிகள் காரணமாக இருந்திருக்கலாம். குறிப்பாக அண்மையில் காலமான முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலர் டிக்சிற் போன்ற இராஜதந்திரிகளின் தீர்க்கதரிசனமற்ற செயற்பாடுகளும் இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் ராம் போன்றவர்களின் வறட்டுத்தனமான வழிகாட்டுதலும் காரணமாக இருந்திருக்கலாம்.

மேலும், சுனாமி அனர்த்தத்தின்போது மேற்கு நாடுகளின் இராஜதந்திரத்தைப் புரிந்து கொண்டாவது இந்திய இராஜதந்திரிகள் நடந்து கொண்டிருக்கலாம். இந்தியா மட்டும்தான் விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடைசெய்துள்ள நாடு அல்ல சிறிலங்காவிற்கு நிதியுதவி செய்யும் பிரதான 12 நாடுகளில் அமெரிக்கா உள்ளிட்ட ஐந்து முக்கிய நாடுகள் விடுதலைப்புலிகள் இயககத்தைத் தடைசெய்தே உள்ளன.

இருப்பினும், சுனாமி அனர்த்தத்தின் பின்னர் இலங்கை அரசியலில் தீவிர கவனம் செலுத்திய மேற்கு நாடுகள் நிவாரணம் என்ற நிலையில் தமிழர் தாயகப் பகுதிக்கும் நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கைகளை வெளியிட்டன. அது மட்டுமல்ல ஒப்பிற்குச் சிறிய அளவிலாயினும் வடக்கு-கிழக்கில் நிவாரணப்பணிகளில் ஈடுபட்டன.

ஆனால் இந்திய ஆட்சியாளர்களோ கொழும்பிலுள்ள சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவரோ இவ் விடயத்தை எள்ளளவிலும் சிந்திக்கவில்லை. சிறிலங்கா அரசாங்கத்துடனேயே தமது உறவுகளைப் பலப்படுத்திக் கொண்டன. இந்தியா கடைப்பிடித்த இவ் இராஜதந்திரமே இன்று இப்பிராந்தியத்தில் இந்தியாவின் செல்வாக்கிற்கு எல்லையிடுபவையாகியுள்ளன.

ஆனால் இந்தியாவில் இருந்து காலம் தாழ்த்திய நிலையிலாயினும் இலங்கை தொடர்பான சிறிலங்காவின் கொள்கை குறிப்பாக இலங்கையின் தமிழர் தொடர்பான நிலைப்பாடு மாற்றம் செய்யப்படுதல் வேண்டும் என்ற குரல்கள் எழுந்துள்ளன. இந்த வகையில் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகப் பேராசிரியர் சகாதேவன் அண்மையில் பி.பி.சி க்கு வழங்கிய பேட்டியல் இக் கருத்தினைச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை பேராசிரியர் சகாதேவன் போன்றவர்கள் தமது கருத்துக்களை ஏன் முன்னர் வலுவாக வெளிப்படுத்தவில்லை. தற்பொழுது வெளிப்படுத்தவேண்டிய தேவை ஏன் வந்தது? என்ற கேள்விக்கும் இடமுண்டு . ஆனால் இதற்குச் சில வேளை இந்தியாவின் இராஜதந்திர செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் சக்தி பொருந்தியவர்களாக இருந்த டிக்சிற் போன்றவர்களின் வறட்டுத்தனமான பிடிவாதங்கள் இவர்களின் கருத்துக்களை புறம்தள்ளியிருக்கலாம். அல்லது, சுனாமி இப் பிராந்தியத்தில் உருவாக்கிய இராணுவச் சமநிலை மாற்றம் பேராசிரியர் சகாதேவன் போன்றவர்களுக்கு இலங்கை தொடர்பான- குறிப்பாக இலங்கைத் தமிழர் தொடர்பான இந்தியாவின் அணுகு முறையில் மாற்றம் ஏற்படவேண்டியதன் அவசியத்தை உணர்த்துவதாக இருந்திருக்கலாம்.

காரணம் எதுவாயினும் இந்தியாவின் அணுகுமுறையில் மாற்றம் ஏற்படவேண்டிய அவசியம் தவிர்க்கமுடியாது ஏற்பட்டுள்ளது என்பது வெளிப்படையானதொன்று.

இப்பிராந்தியத்தில் அமெரிக்காவோ அன்றி அதன் நேசநாடுகளோ தமது ஆயுதப் படைகளை நிரந்தரமாக வைத்திருக்காது போனாலும், இப்பிராந்தியத்தில் எவ்வேளைகளிலும் தமது ஆயுதப்படைகளை இந்தியாவின் அனுசரணையின்றி அதாவது. இந்தியாவின் கருத்தறியாது தரையிறக்க முடியும் என்பதை அவை செயல் மூலம் வெளிப்படுத்தியுள்ளன.


அத்தோடு சிறிலங்கா இந்தியாவின் விசுவாசம் மிக்க உற்ற நண்பனாக எப்பொழுதுமே இருக்க மாட்டாது என்பதையும் இந் நிகழ்வுகள் வெளிப்படுத்தியிருக்கும். இதேவேளை வரலாற்று ரீதியாகவும் சரி, இன்றும் சரி இந்தியா மீது சிறிலங்கா தனது விசுவாசத்தை வெளிப்படுத்தியது கிடையாது.

> **இப்பிராந்தியத்தில் அமெரிக்காவோ அன்றி அதன் நேசநாடுகளோ தமது ஆயுதப் படைகளை நிரந்தரமாக வைத்திருக்காது போனாலும், இப்பிராந்தியத்தில் எவ்வேளைகளிலும் தமது ஆயுதப்படைகளை இந்தியாவின் அனுசரணையின்றி அதாவது இந்தியாவின் கருத்தறியாது தரையிறக்க முடியும் என்பதை அவை செயல் மூலம் வெளிப்படுத்தியுள்ளன.**

**ஜெயராஜ்**

# வடமாநில தேர்தல்களம் — ஒரு பார்வை

வடமாநில சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு காங்கிரஸ் கட்சியும் பாரதிய ஜனதாவும் பலப் பரீட்சையில் இறங்கியுள்ளன. கருத்துக் கணிப்புக்களின்படி வட மாநிலங்கள் இரண்டில் காங்கிரஸ் வெற்றிவாகை சூடும் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.



சோனியாகாந்தி

இன்னும் மூன்று நாட்களில் பீகார், ஜார்க்கண்ட், ஹரியானா மாநிலங்களில் முதல் கட்ட வாக்குப் பதிவு ஆரம்பமாகவுள்ளது. இவற்றில் ஜார்க்கண்ட், ஹரியானா, மாநிலங்களை காங்கிரஸ் தனதாக்கிக் கொள்ளும் என்றும் பீகாரில் எந்தக் கட்சிக்கும் பெரும் பான்மை கிடைக்காது என்றும் கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

கடந்த மக்களவைத் தேர்தலில் ஆட்சி மாற்றம் நடைபெற்றதையடுத்து ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் எதிர் கொள்ளும் முதலாவது வட மாநில சட்டசபைத் தேர்தல் இது வாகும்.

அதனால்தான் வடமாநிலங்களில் தேர்தல் பிரச்சாரம் சூடு பிடித்துள்ளதுடன் உச்சக் கட்டத்தையும் நெருங்கிக் கொண்டிருக்கிறது. நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் ஆட்சியை பறிகொடுத்த பாரதிய ஜனதா கட்சியோ வட மாநிலங்களை காங்கிரஸ் வசம் விடப்போவதில்லை என்பது போன்றே பிரச்சாரக்களத்தில் குதித்துள்ளன.

இதேபோன்று ஏற்கனவே ஆட்சிப் பீடமேறியுள்ள காங்கிரஸ் கட்சியும் மத்தியில் ஆட்சியைப்பிடித்தது போன்றே வட மாநிலங்களையும் கைப்பற்று வோம் என்பதுபோல பிரச்சாரத்தில் தூள் கிளப்புகின்றது.

பீகார் மாநிலம் இந்தியாவில் இரண்டாவது பெரிய மாநிலமாகும், இங்கு காங்கிரஸ் கட்சியும், ஜனதா கட்சியும் மாறிமாறி ஆட்சி செய்தன. பின்னர் காங்கிரஸ் வலு விழந்து விட்டது.1990 இன் பின்னர் ஜனதா கட்சி தலைவரான லல்லு பிரசாத் யாதேவ் தொடர்ந்து மூன்று சட்டசபைத் தேர்தல்களிலும் வெற்றி வாகை சூடி ஆட்சிப் பீடம் ஏறினார்.

இதற்குக் காரணம் பீகாரில் யாதவகுல மக்கள் லல்லு பிரசாத்தை கிருஸ்ணராக ஏற்றுக் கொண்டமையே என்று லல்லு விமர்சிக்கப் பட்டகாலமுண்டு.

மாட்டுத்தீவன ஊழல் காரணமாக லல்லுபிரசாத் பதவி துறக்க வேண்டிய பரிதாபம் ஏற்பட்ட போதும், தனது மனைவி ராப்பரி தேவியை முதலமைச்சராக்கி, கடந்த 14 ஆண்டுகளாக லல்லுபிரசாத் தனது பிடிக்குள் பீகார் மாநிலத்தை வைத்திருக்கின்றார்.

ஆரம்பகாலம் முதலே காங்கிரசை எட்டிக்காயாகக் கருதி வந்தவர் லல்லுபிரசாத், ஜனதா கட்சியிலிருந்து ஜார்ச் பெர்னாண்டஸ் பிரிந்து தனிக்கட்சி அமைத்து பாரதிய ஜனதாவில் அங்கம் வகித்தார்.

இதனால் ஜார்ச் பெர்னாண்டசை பழி தீர்க்க வேணடும் என்பதற்காகவே தான் காங்கிரஸுடன் லல்லு பிரசாத் இணைந்தார் என்று கூறப் படுகின்றது.

இதற்கு மற்றொரு காரணம் 1999 இல் வாஜ்பாய் அரசு, பீகார் அரசை 356 ஆவது சட்டம் மூலம் கலைத்தது. என்றாலும் பாராளுமன்ற இரு அவைகளினதும் ஒப்புதலை வாஜ்பாய் அரசினால் பெற முடியவில்லை.

இதற்குக் காரணம் காங்கிரஸ் எதிர்வரிசையில் இருந்து கொண்டு பீகார் அரசை 356ஆவது சட்டம் மூலம்கலைப்பதற்கு மறுப்புக் கூறியதேயாகும்.

இந்த நன்றி விசுவாசம் காரணமாகவும்தான் கடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் ஆட்சியமைக்க லல்லு பிரசாத் உதவிக்கரம் நீட்டினார் என்றும் கூறலாம்.

இதேவேளை கடந்த மக்களவைத் தேர்தலில், காங்கிரஸ், ராஷ்டிரிய ஜனதாதளம் (லல்லு பிரசாத்),தேசியவாத காங்கிரஸ் (சரத்பவார்) முக்தி மோட்சா (சிபு சோரன்) லோக்ஜனசக்தி (பஸ்வான்) மார்ச்சிய கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட் என்பன சேர்ந்தே வெற்றி பெற்றன.

இம்முறை சட்டசபைத் தேர்தலில் இந்தக் கூட்டு சிதறி விட்டது ஆளாளுக்குத் தனித்தும், கூட்டுச் சேர்ந்துமே இம் முறை களத்தில் இறங்குகின்றனர்.

இதற்கு முக்கிய காரணம் மத்தியமைச்சரவையில் அங்கம் வகிக்கும் லல்லுபிரசாத் யாதேவும், பஸ்வானும் மக்களவையில் ஆளையாள் மாறி மாறி ஊழல் குற்றச் சாட்டுக்களை சுமத்தி எதிர்க் கட்சிகளின் பலத்த விமர்சனத்திற்கு உள்ளானமைதான்.

அது மட்டுமன்றி எதிர்வரும் பீகார் சட்டசபைத் தேர்தலில் லல்லு பிரசாத்தை தோற்கடிக்கப் போவதாக பஸ்வான் சபதம் செய்துள்ளார். பஸ்வானை மூழ்கடித்தே தீருவதாக லல்லுபிரசாத் வீராவேஷமாகவும் அறிக்கை விட்டுள்ளார்.

இதனால் காங்கிரஸ் கட்சி பீகாரில் யாருடன் கூட்டுச் சேர்வது என்று தெரியாது விழி பிதுங்கி நின்றதனால்தான் இறுதியில் தனித்து 80 தொகுதிகளில் போட்டியிடுவதாக அறிவித்திருக்கின்றது.

லல்லு பிரசாத் யாதேவ், தேசியவாத காங்கிரஸ், மார்ச்சிஸ், கம்யூனிஸ்டுகளுடன் கூட்டாக போட்டியிடுவதாக தெரியவந்துள்ளது.

கடந்த சட்டசபைத் தேர்தலில் 225 தொகுதிகளில் போட்டியிட்ட லல்லு பிரசாத்தின் கூட்டணி 115 இடங்களை தனதாக்கியது.

ஆனால் கடந்த முறை போன்று இம் முறை வாக்குகள் ஒன்றிணையாது சிதறப்போகும் நிலையே இருக்கின்றது இதேவேளை யாதவகுல மக்களிடம் லல்லு பிரசாத்திற்கு தற்போதும்செல்வாக்கு இருப்பதாக அவதானிப்புகள் கூறுகின்றன.



லல்லு

அதேநேரம் லஞ்ச ஊழல், எதிர்க்கட்சிகளின் வலுவும் அதிகரித்திருப்பதாக எதிர்வு கூறப் படுகின்றது.

இதனால் பீகார் மாநிலத்தில் ஆட்சியமைக்கப் போவது யார் என்பது பெரிய வினா.

பெரும்பான்மை எவருக்கும் கிடைக்காது என்பதும், தொங்கு சட்டசபையே ஏற்படலாம் என்றும் கூட அவதானிப்புக்களாகவே இருக்கின்றது. இதேவேளை பஸ்வானின் கட்சியைச் சேர்ந்தவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். பீகாரில் வன்முறை தலை விரித்தாடுவதாக வாஜ்பாய் பிரச்சாரம் செய்கின்றார்.

அதேநேரம் காங்கிரஸ் பீகாரில் பிரச்சாரம் செய்வதில் தயக்கம் காட்டுவதாகத் தெரிய வருகின்றது. ஏனெனில் பஸ்வானின் லோக்ஜனசக்தியும் லல்லுபிரசாத்தின் ராஷ்டிரிய ஜன தாத்தளமும் மத்தியரசில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பஸ்வான் பாரதிய ஜனதாவுடன் இணையக் கூடும் என்றும் சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் காங்கிரஸ் அரசின் பெரும்பான்மை கேள்விக் குறியாகும் என்று எதிர்வு கூறப் படுகின்றது.

மறுபுறம் காங்கிரஸ் கட்சியுடன் மாயாவதியின் கட்சி நெருக்கம் காட்டுவதால் காங்கிரஸின் பெரும் பான்மை நிலைக்கும் என்றும் நம்பப்படுகின்றது.

இதே போன்று பெப்ரவரி 3,15, 23 ஆம் திகதிகளில் மூன்று கட்டங்களாக ஜார்க்கண்ட் மாநிலமும் சட்டசபைத் தேர்தலைச் சந்திக்கவுள்ளது. 2000 ஆம் ஆண்டில் பீகாரில் இருந்து பிரிந்த பகுதியே இந்த ஜார்க்கண்ட் மாநிலமாகத் திகழ்கின்றது. தனி மாநிலமான பின்னர் முதன்முதல் தர்சிக்கும் சட்டசபைத் தேர்தல் என்பது குறிப் பிடத்தக்கது.

இங்கு காங்கிரஸும், ஜார்க்கண்ட் முக்தி மோட்சா கட்சியும் கூட்டாக 81 தொகுதிகளிலும் களமிறங்குகின்றன.

பீகாரிலிருந்து ஜார்க்கண்ட் தனி மாநிலமாக வேண்டுமென்று நக்ஸலைட் அமைப்புக்களும், முக்தி மோட்சா எனும் பிரிவினைவாத குழுக்களும் 1970 முதல் போராட்டம் நடத்தியதையடுத்தே 2000 ஆம் ஆண்டில் ஜார்க்கண்ட் தனி மாநில மானது

ஜார்க்கண்ட் தனி மாநிலமாவதற்குப் பாரதிய ஜனதாக் கட்சியே துணைநின்றது என்பதனால் இதுவரை காலமும் தெற்குப்பீகாரில் (தற்போதைய ஜார்க் கண்ட் மாநிலம்) பாரதிய ஜனதாவே வெற்றி பெற்றிருக்கின்றது.

ஆனால் கடந்த மக்களவைத் தேர்தலில் 14 இடங்களில் ஏழு இடங்களைக் காங்கிரஸ் பாரதிய ஜனதாவிடமிருந்து தட்டிப்பறித்து விட்டமை குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி முக்தி மோட்சா கட்சி (சிபுசோரன்) நான்கு இடங்களைக் கைப்பற்றிய போதும், பாரதியஜனதா வெறும் ஒரேஒரு இடத்தைத்தான் கைப்பற்ற முடிந்தமையினையும் அவதானி[illegible]யும்.

இதனால் ஜார்க்கண்டில் ஆளும் பாரதிய ஜனதாக் கூட்டணி சிபுசோரன் மீது நிலுவையிலிருந்த பழைய வழக்கைக் கிளறியெடுத்து சிபு சோரனை மத்திய மைச்சர் பதவியிலிருந்து ஓட ஓட விரட்டியது முண்டு.



வாஜ்பாய்

ஆனால் சரியான ஆதாரங்களின்றி நிரூபிக்கப்படாத மத்தியமைச்சர் பதவிகளை எவரும் இராஜினாமா செய்யத் தேவையில்லையென்று காங்கிரஸ் அரசு சிபுசோரனை மீண்டும் மத்திய மைச்சர் பதவியில் சேர்த்துக் கொண்டிருக்கின்றது.

இதனால் சிபு சோரன் கட்சியானது காங்கிரஸ் மீது நன்றி விசுவாசம் கொண்டுள்ள அதேநேரம் ஜார்க்கண்ட் மாநிலத்தில் காங்கிரஸ் கூட்டணியே ஆட்சியமைக்க பாடுபடப் போவதாகப் பாரதிய ஜனதா கூட்டணிக்கு எச்சரிக்கை விடுத் திருந்தமையுமுண்டு.

எனவே கருத்துக்கணிப்புக்கள் போன்றே ஜார்க்கண்ட் மாநிலத்தில் காங்கிரஸும், முக்திமோட்சா கட்சியும் வெற்றி பெற்றாலும் பெற்றுவிடக்கூடும்.

ஏனெனில் ஜார்க்கண்ட் மாநிலத்தில் சிபுசோரனது கட்சிக்குச் செல்வாக்கும் ஆதரவும் இருப்பதாக நம்பப்படுகின்றமையும் காரணமாகும்.

இதேவேளை கடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் ஒன்பது, ஜார்க்கண்ட் முக்தி மோட்சா நான்கு இடங்களையும் பெற்றிருக்கின்றன. பாரதிய ஜனதா 14 இடங்களில் போட்டியிட்டபோதும் ஒரு இடத்தை மட்டுமே கைப்பற்றியது.

ஹரியானா மாநிலத்தில் பெப்ரவரி மூன்றாம் திகதி மட்டுமே வாக்குப்பதிவுகள் நடைபெறவுள்ளன.

இங்கும் காங்கிரஸ் கட்சியும், ஜனதாக்கட்சியுமே மாறி மாறி ஆட்சியைத் தக்க வைத்து வந்துள்ளன.

முன்னாள்துணைப் பிரதமர் தேவிலாலின் ஜனதாக்கட்சி உடைந்து விட்ட போதும் அவரது கட்சியான தேசிய லோக்தளக் கட்சியே இப்போது ஹரியானாவை ஆழ்கின்றது.

அதாவது தேவிலாலின் மகன் சௌத்தாலா முன்னர் பாரதிய ஜனதாவுடன் இணைந்து ஆட்சியமைத்தார். தற்போது தனித்து ஆட்சி செய்துவருகின்றார்.

இம்முறையும் சௌத்தாலா வெற்றி பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் கூட காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்து சென்று பாரதிய ஜனதாவுடன் கூட்டணி வகித்த கட்சிகள் மீண்டும் காங்கிரஸுடன் இணைந்துள்ளன. அதனால் ஹரியானா காங்கிரஸ் வசமாகும் என்றே கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன.

அத்துடன் கடந்த மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி 10 இடங்களில் போட்டியிட்டு ஒன்பது இடங்களைக்கைப்பற்றியுள்ளது. பாரதிய ஜனதா கட்சியும் அதே 10 இடங்களில் ஒரு இடத்தை மட்டுமே தக்க வைத்திருக்கின்றது.

மேலும் ஹரியானா மாநிலத்தில் பாரதிய ஜனதா கட்சியினதும் ஆளும் இந்திய தேசிய லோக்தள கட்சியினதும் செல் வாக்குச் சரிந்துள்ளது என்பதனால் காங்கிரஸ் ஹரியானாவை வெற்றி கொள்ளும் என்றே எதிர்பார்க்கப் படுகின்றது.

இதேவேளை கருத்துக்கணிப்புக்கள்எல்லாம் உண்மையாகி விடும் என்றும் நம்பமுடியாது. கடந்த மக்களவைத் தேர்தலில் வாஜ்பாயின் கூட்டணியே மீண்டும் ஆட்சியமைக்கும் என்று இந்தியா ருடே உள்ளிட்டவை கருத்துக் கணிப்பு கூறியிருந்தன.

ஆனால் நடந்ததோ வேறு. காங்கிரஸ் கூட்டணி ஆட்சியமைத்து விட்டது. அதேபோன்று வடமாநிலங்களிலும் நிலைமைகள் மாறக் கூடும் அல்லது கருத்துக் கணிப்புக்கள் போன்றே நடந்து விடலாம்.

எது எப்படியோ வடமாநிலங்களில் ஆட்சியைப் பிடிக்கப் போவது யார்....? என்பதனை இன்னும் மூன்று நாட்களின் பின்னர் படிப்படியாகத் தெரியவரும். அதுவரை நாம் காத்திருக்கத்தான் வேண்டும்.

அ.கலைவாணி

# உலகமே அழிஞ்சு போட்டுது எண்டு நினைச்சன் ஆனால் முல்லைத்தீவு மட்டும் தான் அழிஞ்சது

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

**பகுதி—10**

அ.லோகீசன்

கடல் பேரலைகளின் மூர்க்கமான தாக்கத்துக்குள்ளாகி தப்பிய ஒருவரை சந்திப்பதற்காக முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரிக்குப் போனோம். அப்போது அங்கே சிறுவர்கள் சிலர் கூடிநின்று விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் யாராவது கடலில் அடிபட்டுத் தப்பினீர்களா, எனக்கேட்டோம். எல்லோரும இல்லை இல்லை என்று பின்வாங்கினார்கள். அதில் ஒரு சிறுவன் மாத்திரம் "நான் நீந்தி வந்து தப்பினனான்'' என்றான். அதை எங்களால் நம்பமுடிய வில்லை. அதனால் அவனிடம் அதைப்பற்றிக் கேட்டோம். அவன் கூறியவை தொடர்கிறது.

எங்கள் வீடு தீர்த்தக்கரை அம்மாளாச்சி கோயிலுக்குப் பக்கத்தில இருக்கிறது. அன்றைக்கு நான் எங்கட வீட்டுக்கும் அங்கால கடலுக்குப் பக்கத்தில இருக்கிற பெரியப்பா வீட்டதான் நிண்டனான். அவற்ற வீடு கடலுக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. பள்ளிக் கூடம் போகாட்டி அங்கதான் போய் விளையாடுறனான். அண்டைக்கும் பள்ளிக் கூடம் போகேல்ல அதால பெரியப்பா வீட்டை விளையாடப் போறனான்.



சம்பவம் இடம்பெற்றவேளை முல்லைத்தீவுக் கடற்கரையோரத்தில் உள்ள தீர்த்தக்கரை அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் உள்ள பெரியப்பா வீட்டில் இருந்த போது மூர்க்கமாக எழுந்தடித்த கடலுடன் போராடி நீந்தித் தப்பிய வெறும் பதினொரு வயதுடைய ஜெசிந்தன் என்ற சிறுவன் தனது அனுபவத்தையும் மனதில் எழுந்த உணர்வுகளையும் விபரிக்கின்றார்.

காலமை நேரத்துக்கு எழும்பிப்போய் கடல்ல அடையல் பாத்துட்டு வீட்ட வந்து முகம் கழுவிப் போட்டு காலமை வடிவாய் சாப்பிட்டுட்டு அம்மாவோட சேந்து சின்ன வேலையள் எல்லாம் செய்து போட்டு பெரியப்பா வீட்டை போனனான். என்னோட அக்காவும் வந்தவா. அங்க போய் அக்கா கையில்'கியூடெக்ஸ்'' அடிச்சுக்கொண்டு இருந்தவா. நான் வீட்டுக்குள்ள போய் இருந்தனான்.

அப்ப ஒரு இரைச்சல் சத்தம் கேட்டது. ஏதோ பெரிய வாகனம் வருகுது எண்டு நான் நினைச்சன். அப்ப அதைப் பாப்பம் எண்டு நினைச்சுக்கொண்டு வெளியால வந்தன். வெளியால வரேக்கதான் சூறாவளிக்காத்து அடிக்கும் எண்டு அம்மா சொன்னது ஞாபகம் வந்தது அதை நினைச்சவுடன எனக்குப் பயம் வந்திட்டுது. சூறாவளி அடிச்சா என்னைக் காத்து வானத்தில தூக்கிக்கொண்டு போயிடும் அதால ஆரும் பெரிய ஆக்களைப்பிடிச்சுக் கொண்டு இல்லாட்டி மரங்களை இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு நிக்கவேணும் எண்டு அம்மா சொன்னவா. இப்ப என்ன செய்யிறதெண்டு யோசிச்சுப்போட்டு வீட்டு வாசலுக்கு வந்தன் நான் வாசலுக்க வரேக்குள்ள தண்ணி வீட்டு செத்தையை எல்லாம் பொத்துக் கொண்டு உள்ளுக்கு வீச்சாய் வந்தது. நான் ஓடுவம் எண்டால் பாதை ஒண்டும் இல்லை. செத்தையைப் பிச்சி வெளியால ஓடுவம் எண்டு நான் யோசிச்சுக்கொண்டு வெளிக்கிட வீடு எனக்கு மேல விழுந்து போட்டுது நான் அதுக்குள்ள கிடந்து நசிபட்டு போனன்.

ஒரு மாதிரி அதுக்குள்ளால தப்பி



விடேல்ல என்ர அக்காவையும் காணேல்ல"

இப்பிடியே தண்ணி அடிச்சுக்கொண்டு போகேக்க பனம்வடலி ஒண்டுக்குள்ள என்னைக் கொண்டுபோய் செருக்கிப் போட்டுது. பிறகு ஒருமாதிரி கஸ்ரப்பட்டு வெளியால வந்திட்டன். வந்தவுடன் தண்ணி என்னைப் பேந்தும் இழுத்துக்கொண்டு போச்சுது. என்னைக்காப்பாற்றவும் ஒருத்தரும் இல்லை. எல்லாரும் தண்ணிக்குள்ள கிடந்து தண்ணிக்கு மேல வந்திட்டன். வந்த உடன நான் தண்ணியோட சேர்ந்து இழுபட்டு போய்க் கொண்டிருந்தன். இப்பிடிப் போகேக்க தண்ணீக்கு மேலால ஒரு கட்டை மிதந்து வந்து என் தலையின்ர பின்பக்கம் அடிச்சுப்போட்டுது. அது அடிச்ச வேகத்தில நான் கீழ போய் பனை மட்டையோட அடிபட்டு உரஞ்சியது. பிறகு மண்ணோட உரஞ்சியது. இதனாலதான் இந்தக் காயம் வந்தது என்று கூறி தனது நெற்றிக் காயத்தை காட்டினான்.

இப்பிடியே அதாலையும் எழும்பி நீந்திக் கொண்டுபோறன் என்ன அலை சுத்திக் கொண்டு போனது. நான் அதுக்குள் சுத்துறதும் எழும்பி நீந்துறதுமாக வந்துகொண்டிருக்க ஒரு வேலிக்குள்ள என்னை கொண்டு போய் செருகியது நான் எழும்பிப்பார்த்தனான். அந்த வேலிபிளேற் கம்பியால அடிச்சுக் கிடந்தது. அதுவும் என்னை வெட்டினது. அது வெட்டினவுடன என்னாலை ஒண்டும் செய்யமுடியாமல் போனது தண்ணி என்னை உருட்ட நான் எழும்பி எழும்பி நீந்தினனான். என்னோட என்ர பெரியப்பான்ர தம்பியும் நீந்தி வந்தவன். அவன் பெரிசா நீந்த மாட்டான். நான் பாக்க அவன் ஒருக்கா தண்ணீல தாண்டு எழும்பினவன் அதைப்பாத்திட்டு நான் அவன் தம்பி எண்டு கூப்பிட்டன் அவனும்"அண்ணா என்னைக் காப்பாத்து எண்டு கத்தினான்" பாவம். அவனும் என்ன மாதிரித்தானே. என்னால அவனுக்கு பக்கத்தில போகேலாமல் போட்டுது. அதோட அவனைக் காணேல்ல அவன் செத்துப் போனான்போல இருக்க வேணும். அதுதான் அவன் என்னைப்பிறகு கூப்பிடேல்ல. நான் அவனைக் காப்பாத்துவம் எண்டு தான் நினைச்சன். தண்ணி போக தாண்டு தாண்டு வந்திச்சினம். என்ன ஒருத்தரும் காப்பாற்ற வரேல்ல. எனக்கு மயக்கம் வாறமாதிரியும் இருந்திச்சுது. இப்பதான் நினைக்



கிறன் நான் தப்பமாட்டன் சாகப்போறன்எண்டு. நினைச்சுக்கொண்டு கடலைப்பார்த்தன். அது பெரிய உயரத்தில நிண்டது. மரங்கள் எல்லாம் மூடிப்போய் இருந்திச்சுது. அதுக்குள்ளையும் எப்பிடித் தப்பிறது எண்டு தான் நான் நினைச்சனான். எனக்கு இப்பிடியெல்லாம் கடல்வரும். எங்களை எல்லாம் இழுக்கும் எண்டு ஒருத்தரும் சொல்ல இல்லையே. பேந்து என்னெண்டு கடல் இப்பிடி வந்தது என்று நினைச்சன்.

அம்மாவையும் காணேல்ல அப்பாவையும் காணேல்ல ஒருத்தரும் இல்லை. நான் என்ன செய்யிறது.அம்மா அம்மா எண்டு கனதரம் கத்தினன். எனக்குப்பயமும் வந்திச்சிது. நான் இனித் தப்ப மாட்டன். சாகப்போறன் .போல கிடக்கு. என்ன செய்வம். ஒருக்கால் யோசிச்சன் பிறகு அப்பிடியே என்னை ஒரு அண்ணா வந்து தூக்கி காப்பாத்திப் போட்டார்.

என்னை தூக்கின அண்ணா கரைக்குக் கொண்டு வந்து விட்டார். நான் கரையில இருந்து யோசிச்சன் அம்மாவும் இல்லை. அப்பாவும் இல்லை. அக்காவும் இல்லை. நான் தனியத்தான் தப்பிட்டன் எண்டு நினைச்சு அழுதன். அங்க தப்பி வந்த ஆக்களை எல்லாம் வடிவாய் பாத்தன் அம்மாக்களும் வருகினமோ எண்டு ஆனா அவையக் காணேல்ல. இப்பநான் தனிய என்ன செய்யிறது. எண்டு நினைச்சுக் கொண்டிருக்க முகாமுக்கு கூட்டி வந்திச்சினம் அங்க போய் பாக்க அப்பாவைக்கண்டன் அப்பா பேந்து என்னை அம்மாட்டை கூட்டிக் கொண்டு போனார். அம்மா என்னைக் கண்டதும் ஓடிவந்து கட்டிப்பிடிச்சுத் தூக்கினா.

நான் உந்தக் கடல் கரைக்கு எத்தின தரம் போயிருப்பன் கடலோட எத்தின தரம் விளையாடி இருப்பன் அப்ப எல்லாம் மெல்லமாவந்து எங்கள கலைக்கிற கடல் இப்பிடி ஏன் பெரிசா எழும்பி எங்களையும் வெருட்டி வீடுகளை எல்லாம்-இடிச்சது? பாவம் கனபேர் செத்துப் போச்சினம். ஏன் கடல் இப்பிடி கனபேரை சாக்காட்டினது? கடலுக்கு போறம் எண்டு சொல்லிப்போட்டு தொழிலுக்கு போறவ எல்லாம் இப்ப உந்தப் பள்ளிக்கூட மண்டபத்திட்டியில வெத்திலபோட்டுக் கொண்டு படுத்திருக்கினம். என்னமாதிரித்தானே அவைக்கும் கடற்கரைக்குப்போகப் பயமாய் இருக்கும் கடல் கரையில நிண்ட போட்டுகள் எல்லாம் இப்ப எவ்வளவு தூரம் தரைக்கு வந்து நெல்லுவயலுக்குள்ளையும். பனம் வடலியளுக்குள்ளயும் கிடக்குது. வலையள் ஒண்டையும் காணேல்ல. என்ன செய்யிறது? கடல் இப்பிடி எல்லாரையும் விரட்டி அடிச்சுப் போட்டுது. நான் எப்பிடி நீந்தி தப்பினன் எண்டுறது அதிசயமாய் கிடக்குது. சிலபேர் நம்பமாட்டினமாம். என்னவோ அந்தப்பயங்கரத்துக்குள்ள இருந்து தப்பிப் போட்டன் என்றான் அந்த சிறுவன் கம்பீரமாக.

கடல்வரேக்க நான் என்ர அம்மா எண்டு கத்தினனான் .அப்பேக்க பெரியப்பா என்னடா எண்டு கத்திக் கொண்டு ஓடினவர்.அவர் ஓடிப்போய் ஒரு தென்னையோட அடிபட்டு கீழ விழுந்து போனார். கடல் கறுப்பு மாதிரி என்ன உயரமாய் வந்திச்சு. கடல் இப்பிடி வர நான் உலகமே அழிஞ்சு போச்சுது எண்டு நினைச்சன். ஆனால் முல்லைத்தீவு மட்டும் தான் அழிஞ்சது.

சுனாமிப் பேரலைகள் முல்லைத்தீவை ஆவேசமாகத் தாக்கிய வேளை கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்துக்குள் இருந்த தனது முகாமில் இருந்து உயிர் தப்பியதுடன் அலை அடித்துக் கொண்டிருந்த சமநேரத்தில் தனது உயிரைக் கூட மதிக்காமல் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழீழ கடற்படைப் போராளி ஒருவர் தனது மீட்பு நடவடிக்கை தொடர்பான செயற்பாடுகள் அங்கு நடந்தது என்ன? என்பவற்றை விபரிக்கிறார். இப்படியும் நடந்ததா? என ஆச்சரியப்படவைக்கும் உணர்ச்சிகரமான அனுபவப் பகிர்வுகள் அவை.அந்தப் பகிர்வுகளை அடுத்த பகுதியில் உங்களுக்காக தருகிறோம். **(தொடரும்)**

# சுனாமியைத் தொடர்ந்து அரசின் அனுசரணையுடன் பொத்துவிலில் புத்தர் சிலை அமைக்க தீவிர முயற்சி

## -சிங்கள குடும்பங்களையும் குடியமர்த்த திட்டம்

(மட்டக்களப்பு)

**பொத்துவில் தமிழ் கிராமத்தில் புத்தர் சிலை ஒன்றினை அமைப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கையினால் இப்பகுதியில் இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்படும் சூழல் உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

புத்தர் சிலை அமைக்கும் செயற்பாட்டுக்கு அரசாங்கம் அனுசரணை வழங்கிவருவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பொத்துவில் உல்லை முஸ்லிம் பிரதேசத்தில் மதரீதியான வெளியார் ஆக்கிரமிப்பு இடம்பெற்று வருவதாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன. பொத்துவில் உல்லை பிரதான வீதியில் புதன்கிழமை அவசர அவசரமாக அரச படைகளின் தீவிர பாதுகாப்புடன் புத்தபகவானின் சிலையொன்றை நிறுவுவதற்கான நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஒரு மாதகாலமாக கடல் பாதிப்பால் உருக்குலைந்து போன கட்டட இடிபாடுகளுக்குள் கஷ்டத்துடன் வாழ்ந்து வரும் மக்களின் துயர் துடைப்பதற்கு கொடுக்கப்படாத முக்கியத்துவம் இந்த சிலை விவகாரத்திற்கு மட்டும் அதீதமாகக் கொடுக்கப்படுவதை அறிந்து மக்கள் விசனமடைந்துள்ளனர்.

முற்றாக அழிந்து போன உல்லைக் கிராமத்தில் 1200 முஸ்லிம் குடும்பங்களுக்கு மத்தியில் மிகக் குறைந்த அளவில் 57 சிங்கள குடும்பங்கள் 1983ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்து வந்துள்ளனர். மொத்தமாக பொத்துவிலில் 6687 முஸ்லிம் குடும்பங்களும் 1640 தமிழ் குடும்பங்களும் சுமார் 130 சிங்களக் குடும்பங்களும் இதுவரை வாழ்ந்து வந்துள்ளனர்.

உல்லைப் பிரதேசத்தில் சுமார் 57 சிங்கள குடும்பங்கள் மட்டு வாக்காளர் இடாப்பில் பதியப்பட்டிருந்தாலும் தற்போது சுமார் 100 குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்க ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து தகவல்கள் வருகின்றன.

மக்கள் மத்தியில் இனரீதியான முறுகல் நிலையை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளுக்கு அரசு பக்கபலமாக இருப்பதாக மக்கள் முறையிட்டுள்ளனர்.

சென்ற 23ஆம் திகதி சம்மாந்துறையில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் அம்பாறை மாவட்டக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொத்துவிலைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்கள் இச்சிலை விவகாரத்தைப் பிரஸ்தாபித்ததைத் தொடர்ந்து நிலைமையை நேரில் கண்டறிவதற்காக முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களை ஸ்தலத்துக்கு விஜயம் செய்யுமாறு கட்சி பணித்ததைத் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எம்.ரி.ஹஸன் அலி, எஸ்.நிஜாமுதீன் ஆகியோர் அங்கு விஜயம் செய்தனர்.

பொலிஸ் வாகனம் ஒன்று பௌத்த மதக் கொடியினைப் பொருத்திக் கொண்டு அந்தப் பிரதேசத்தில் அடிக்கடி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததை தாங்கள் நேரில் கண்டதாக பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்க வேண்டியவர்களே ஒரு குறிப்பிட்ட மதத்தின் கொடியினைப் பொருத்திக் கொண்டு அதிரடி நடவடிக்கையாக இந்த சிலை நிறுவும் பணியைப் பாதுகாப்பதில் ஈடுபட்டதைக் கண்ட மக்கள் பீதியுடனும் கவலையுடனும் காணப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### மூவர் அடையாளம் காணப்பட்டனர்

ஊடகவியலாளர் ரிச்சர்ட் டி சொய்சா கொலை வழக்கில் பொலிஸ் அதிகாரிகளான மூன்று பிரதிவாதிகளை சாட்சி அடையாளம் காட்டியுள்ளார். 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 18 ஆம் திகதி ராஜகிரியவில் உள்ள வீட்டில் இருந்து ரிச்சர்ட் டிசொய்சா கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டார். (32)

# முஸ்லிம் காங்கிரசிற்குள் முரண்பாடு என்ற தகவலுக்கு மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்குள் முரண்பாடு என வெளியான தகவல்கள் தொடர்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் தேசிய அமைப்பாளரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர். இது தொடர்பில் தமது கருத்தைக்கூறும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இது தமது கட்சிக்கு எதிராக செய்யப்பட்ட ஒரு பிரசாரமாகும் எனத் தெரிவித்தார். இதேவேளை கட்சிக்குள் முரண்பாடு என்ற தகவலில் எவ்வித உண்மையுமில்லை என தேசிய அமைப்பாளரான கே.ஏ.பாயிஸ் தெரிவிக்கிறார். (32)

## -வாகன இலக்கத்தை மாற்றி

# விற்பனை செய்த குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி இடைநிறுத்தம்

நீர்கொழும்பு கொச்சிக்கடை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான பரிசோதகர் மஹிந்த லியனகே உடனடியாக அமுலாகும் வகையில் பதவியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். இவர் செசி இலக்கத்தை மாற்றி வாகனம் ஒன்றை விற்பனை செய்தார் என பொலிசின் சுயாதீன ஆணைக்குழுவுக்கு தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இவர் நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்ட வேளையில் அவரை 10 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.(32)

# சுனாமி ஏற்படும் அளவுக்கு பூமியதிர்ச்சி ஏற்படவில்லை

இலங்கையிலோ அல்லது இந்து சமுத்திரப் பிராந்தியத்திலோ கடந்த 26 ஆம் திகதியின் பின்னர் சுனாமி அனர்த்தத்தை ஏற்படுத்தும் அளவிற்கு புவியதிர்வு எதுவும் ஏற்படவில்லை என புவியியல் மையம் தெரிவித்துள்ளது

இது தொடர்பாக கருத்துரைக்கும் புவியியல் மைய அதிகாரி திபானி நிக்கோபார்தீவுப் பகுதியில் 5.6 முதல் 6.2 ரிக்டர் அளவிலான புவியதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. ஆயினும் அவை சுனாமி அனர்த்தத்தை ஏற்படுத்தக்கூடியவை அல்ல. எனவே மக்கள் எவ்வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. இந்த அதிர்வுகள் சுனாமி அலையை ஏற்படுத்தக்கூடிய வல்லமையைக் கொண்டவையல்ல என அவர் குறிப்பிட்டார். (32)

# சனாதிபதியின் இந்தியசார்பு நிலைப்பாட்டால் அமெரிக்க தரப்பு அதிருப்தியாம்!

சனாதிபதியின் இந்திய சார்பு நிலைப்பாடு குறித்து அமெரிக்க தரப்பில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது. அண்மையில் இந்திய கடற்படையினர் சனாதிபதியை சந்தித்துப் பேசிய போது இந்தியாவின் உடனடி உதவிகளை சனாதிபதி நன்றி கூர்ந்து பாராட்டியதுடன் நாட்டின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு இந்தியா உதவி புரிய வேண்டும் என்றும் வேண்டுகோள்விடுத்திருந்தமை அமெரிக்கத் தரப்பை ஓரம் கட்டும் நடவடிக்கை என அரசியல் விமர்சனங்கள் வெளியாகியுள்ளன.

பிராந்திய ஆதிக்கம் மிக்க இந்தியாவின் பங்களிப்புடன் இலங்கையின் இன விவகாரத்திற்கு தீர்வு காண்பதையே கூட்டமைப்புஅரசாங்கம் விரும்புவதாகவும் இதனால் சனாதிபதி இந்திய அக்கறையினை அதிகம் வெளிப்படுத்தி வருவதாகவும்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு இறுதி வரை இலங்கையில் நிலை கொண்டிருப்பதற்கு ஏதுவாக மீள் கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு அமெரிக்கப் படைகள் ஆயத்தங்களை மேற்கொண்டிருந்ததாகவும் சனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் இந்திய சார்பு நிலை குறித்த நிலைப்பாடுகள் வெளியானதைத் தொடர்ந்து தமது தங்கியிருக்கும் திட்டத்தைக் கைவிட்டு அமெரிக்கப் படைகள் நாடு திரும்பத் தீர்மானித்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை இது வரை 1600 துருப்புகள் இலங்கையில் தரையிறக்கப்பட்டுள்ளதாக அமெரிக்கத் தகவல்கள் தெரிவித்துள்ளன.யூ.எஸ்.எஸ் டுலத் என்ற தரையிறக்கக் கப்பல் மூலம் படையினரும்கனரக வாகனங்களும் இலங்கைக்கு எடுத்துவரப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.அமெரிக்க படைகளின் ஒரு பகுதியினர் கட்டுநாயக்கா வானூர்தித்தளத்தில் தங்கியுள்ளனர்.காலியிலும் யாழ்ப்பாணத்திலும்அமெரிக்கப் படைகள் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகவும் தற்போது இவர்கள் தமது பணிகளை நிறைவு செய்துள்ள நிலையில் மீள அமெரிக்கா திரும்புவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் அமெரிக்கப் படைத் தரப்பு தெரிவித்துள்ளது.

இதேவேளை நான்கு உலங்கு வானூர்திகளும் துருப்புக்காவி விமானம் ஒன்றும் அமெரிக்கப் படைகளின் பயன்பாட்டிற்காக இலங்கையில்தரித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டின் பேரில் எஸ்.பி.திஸாநாயக்க மீது விசாரணை

(கொழும்பு)

இரண்டு வருடகால சிறைத் தண்டனையை அனுபவிக்கும் எஸ்.பி.திஸாநாயக்க இலஞ்சம் பெற்ற குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முற்படுத்தப்பட்டார்.

இதன்போது அவர் தான் குற்றவாளியல்ல என்று மேல் நீதிமன்ற நீதிபதி ரோகினி பெரராவிடம் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இந்த வழக்கு விசாரணை யூன் மாதம் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பிரதிவாதியின் விரல் அடையாளத்தைப் பெற்றுக்கொண்டபின்னர் அவரை 25 ஆயிரம் ரூபா பிணையிலும் ஒரு கோடி ரூபா உத்தரவாதப் பிணையிலும் செல்ல அனுமதிக்குமாறு நீதிபதி பணித்துள்ளார். இதேவேளை நீதிபதி திஸாநாயக்கவை அவரது சட்டத்தரணிகளுடன்ஆலோசனை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு பணித்துள்ளார். நீதிபதி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்திற்கே இந்தப் பணிப்புரையை விடுத்துள்ளார். திஸாநாயக்கவின் சட்டத் தரணிகள் விடுத்தவேண்டுகோளைத் தொடர்ந்து இந்தப்பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.





தரம் 1இல் மாணவர்களை இணைக்கும் நிகழ்வு வைபவ ரீதியாக கடந்த வியாழக்கிழமையன்று கிளி/பூநகரி முட்கொம்பன் அ.த.க பாடசாலையில் சிறப்புற நடைபெற்றது. பள்ளி முதல்வர் த. கண்ணபிரான் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தரம் 1இல் 30 மாணவர்கள் வைபவ ரீதியாக முட்கொம்பன் அ.த.க பாடசாலையில் இணைக்கப்பெற்றதுடன் மேற்படி மாணவர்களின் பெற்றோர்கள், சிறார்களுக்கு மாலை அணிவித்து பாடசாலை வளாகத்திலிருந்து மங்கல வாத்திய இசையுடன் முட்கொம்பன் ஆலயத்திற்கு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு விசேட பூசை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து பாடசாலைக்கு அழைத்து வரப்பட்ட மாணவர்களுக்கு ஆரம்பக் கல்வி ஆசிரியை செல்வி ந. நிரஞ்சினி இனிப்புப் பண்டங்களை வழங்கி வரவேற்றார். தொடர்ந்து மாணவச்சிறார்களின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. முட்கொம்பன் கிராமத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்தப்பெற்றுவரும் சுடரொளி, உதயா முன்பள்ளிகளில் கல்வி கற்ற மேற்படி 30 சிறார்களே அன்றைய தினம் பூநகரி முட்கொம்பன் அ.த.க பாடசாலையில் 1 ஆம் ஆண்டில் இணைந்து கொண்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ((சோ)

# சுனாமியால் பலியான வெளிநாட்டவர் சடலங்கள் மரபணுப் பரிசோதனைக்கென தோண்டியெடுப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் சுனாமி அனர்த்தத்தின்போது பலியாகிவிசாரணையின்றிப் புதைக்கப்பட்ட வெளிநாட்டவரின் சடலங்கள் மீண்டும் புதைகுழியிலிருந்து எடுக்கப்பட்டு மரபணுப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. சுனாமியின்போது மரணமான வெளிநாட்டவர்களின் சடலங்கள் எவ்வித விசாரணைகளும் இன்றிப் புதைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே இது தொடர்பாக சர்வதேச பொலிசார் சிறிலங்கா பொலிசாருடன் தொடர்புகொண்டு விசாரணைகளை நடத்தியிருந்தனர். இந்த நிலையில் சர்வதேசப் பொலிசாரின் உதவியுடன் காலி மீட்டியாகொட என்ற இடத்தில் உள்ள ஒரு புதைகுழியில் இருந்து வெளிநாட்டவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. அது உடனடியாகவே கொழும்புக்கு பிரேத பரிசோதனைக்காக எடுத்து வரப்பட்டு மரபணுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதேவேளை காலி எல்பிட்டிய பகுதியிலும் இவ்வாறாக வெளிநாட்டவர்கள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் புதைகுழி ஒன்றுநேற்று முன்தினம் தோண்டப்பட்டது. (32)

# கடலோரப் பாதுகாப்புக்கு புதிய திட்டம்

## இராணுவ மந்திரி பிரணாப் முகர்ஜி கூறுகிறார்

(புதுடில்லி)

கடலோரப்பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக ரூ.742 கோடியில் புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்துக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளதுதென இந்திய சஞ்சிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இத்திட்டம் தொடர்பாக இராணுவ மந்திரி பிரணாப் முகர்ஜி கூறுகையில் ;

" இந்தத்திட்டத்தின் படி கடலோர ரோந்து மற்றும் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்படும். கடலோரப்பகுதியில் நடைபெறும் குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக தனி பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது. இதன் சிறப்பம்சமாகும்.

கடல் பகுதியில் 'மூன்று அடுக்கு' முறை பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும். ஆழ்கடல் பாதுகாப்புப்பகுதி பாதுகாப்பை இந்தியக்கப்பல் படையும் கடற்கரையில் இருந்து 10 முதல் 30 மைல் தூரத்துக்குக் கடலோர காவல் படையும், 5 மைல் தூரம் வரை கடலோர பொலிஸ் நிலையம் மற்றும் கடலோர காவல் படையினரும் பாதுகாப்புப்பணிகளை மேற்கொள்வார்கள். அத்துடன் கடலோர காவல்படை மேலும் வலுப்படுத்தப்படும்." என்றும் கூறினார்.

# சேவை வரியை எதிர்த்து

## இந்தியா முழுவதும் கடையடைப்பு


சேவை வரியை எதிர்த்து இந்தியா முழுவதும் வணிகர்கள் முதலாம் திகதி கடையடைப்பு நடத்துகிறார்கள். இந்தியா முழுவதும் பல்வேறு பொருட்கள் மீது சேவை வரி விதிக்கப்படுகிறது. இதற்கான உத்தரவை சமீபத்தில் மத்திய அரசு பிறப்பித்தது.சேவை வரிக்கு வணிகர்களும்,வியாபார நிறுவனங்களும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில்,வருகிற பெப்ரவரி 1 ஆம் திகதி இந்தியா முழுவதும் வியாபாரிகள் கடையடைப்பு நடத்துகிறார்கள்.இது குறித்து அகில இந்திய வர்த்தகர்கள் சங்க பொதுச் செயலாளர் பிரிவின் கான்டெல் கருத்து கூறுகையில் "மத்திய நிதி மந்திரி ப.சிதம்பரத்தைச் சந்தித்தோம். அரசின் கெஜட்டில் வெளியான போக்குவரத்துதுறை மீதான சேவை வரி விவரத்துக்கும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சேவை வரிக்கும் வித்தியாசம் உள்ளது என்பதை நிதி மந்திரியிடம் விளக்கினோம் என்றார்

# ஆலடிஅருணா கொலை

## சந்தேக நபர் தடுப்புக் காவலில்

முன்னாள் தமிழக அமைச்சர் ஆலடி அருணா கொலையில் குற்றவாளியாகக் கருதப்பட்டு கைது செய்யப்பட்ட வேல்துரை என்ற சந்தேக நபரை 3 நாள் தடுப்புக் காவலில் வைத்து பின் விசாரிக்க தமிழக நீதிமன்று உத்தரவிட்டது.வேல்துரையுடன் இருந்ததாகக் கூறப்படும் மற்றைய சந்தேக நபர் பெனடிக்ட் என்பவர் பொலிசார் கைது செய்ய முற்பட்டவேளை விஷமருந்து உண்டு தற்கொலை செய்து கொண்டதாக காவல்துறை அறிவித்திருந்தது.



ஆலடி அருணா கொலையில் குஜராத்தில் கைது செய்யப்பட்டு விமானம் மூலம் நெல்லைக்குக் கொண்டு வரப்பட்ட வேல்துரையை தென்காசி நீதிமன்றில் நேற்று முன்தினம் ஒப்படைத்தபோது எடுத்த படம்.

# அந்தமான் நிக்கோபார் தீவுகளில்

## பூமி அதிர்வு தொடர்கிறது

### மக்கள் வெளியேற்றம்

**அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நில நடுக்கம் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகத் தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கிறது. நேற்று முன்தினம் மட்டும் இப்பகுதிகளில் 10 தடவைக்கு மேல் நில நடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

கடந்த மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட சுனாமிப்பேரலைக்குக் காரணமாக அமைந்த மிகப்பெரிய நிலநடுக்கத்திற்குப் பின் அன்றிலிருந்து தொடர்ச்சியாக அந்தமான், நிக்கோபார் தீவுகளில் நிலநடுக்கம் ஏற்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகிய வண்ணம் உள்ளன. இதன் காரணமாக அச்சமடைந்துள்ள இத்தீவுகளைச் சேர்ந்த மக்கள் அவ் விடங்களைவிட்டு வெளியேறி வருகின்றனர்.

அந்தமான் நிக்கோபார் தீவுகளில் 'காமரட்டா" தீவை மையமாக வைத்து இப் பூமியதிர்வுகள் இடம்பெற்றுள்ளன. பத்து முறையாக அதிர்ந்த பூமியதிர்வின் அளவுகள் ரிக்டர் அளவு கோலில் 5.0-5.8 வரைக்கும் பதிவாகியுள்ளது. பிந்திய தகவலின்படி நேற்றைய தினமும் இப்பூமியதிர்வு தொடர்கின்றதாக அறியவருகிறது.

கடந்த மாதம் இடம்பெற்ற சுனாமி அலைக்கு காரணமான பூமியதிர்வு ரிக்டர் அளவு கோலில் 9.0 என பதிவகி இருந்தது குறிப்பிடத்தக்கது.


# மு.க.ஸ்டாலினிற்கு எதிரான

## அ.தி.மு.க வின் வழக்கு தொடர்கிறது

(சென்னை)

சென்னை கடற்கரை சாலையில் உள்ள ராணி மேரி கல்லூரியை இடித்து விட்டு புதிய தலைமைச் செயலகம் கட்ட தமிழக அரசு முன்வந்ததும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மாணவிகள் போராடினார்கள். அப்போது தி.மு.க. துணை ப்பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின் நேரில் சென்று, போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார் இதற்காக அவர் மீது அ.தி.மு.க அரசு வழக்குத் தொடர்ந்து கைது செய்தது. கடந்த 9.4.2003 அன்று நள்ளிரவில் ஸ்டாலினைப் பொலிசார் வீடு புகுந்து கைது செய்தனர். பொலிசை கொலை செய்ய முயன்றதாக அவர் மீதும் மற்றும் 14 பேர் மீதும் 9 பிரிவுகளில் வழக்குத் தொடர்ந்தனர். அந்த வழக்கு விசாரணை சைதாப்பேட்டை 9 ஆவது நடுவர் மன்றத்தில் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது.

அப்போது மு.க.ஸ்டாலின் உட்பட 15பேர் ஆஜரானார்கள். அவர்கள் அனைவருக்கும் இந்த வழக்கின் குற்றப்பத்திரிகை நகல் வழங்க நீதிபதி மோகன்ராஜ் உத்தரவிட்டார். அதை அவர்கள் பெற்றுக் கொண்டனர். பின்னர் இந்த வழக்கின் விசாரணையைப் பெப்ரவரி 16ஆம் திகதிக்குத் தள்ளிவைத்து நீதவான் உத்தரவிட்டார்.



சைதாப்பேட்டை நீதிமன்றம் வந்த தி.மு.க துணைப்பொதுச் செயலாளர் மு.க.ஸ்டாலின் அங்கு திரண்டிருந்த தி.மு.க.வினரைப் பார்த்து கையசைத்த போது எடுத்த படம்

# அ.தி.மு.க.உறுப்பினர்

## தி.மு.க.வில் இணைந்தார்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் டி.மஸ்தான் என்பவர் நேற்று முன்தினம் மு. கருணாநிதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தில் கருணாநிதியின் முன்னிலையில் தன்னை இணைத்துக் கொண்டார்.

மாநிலங்களவை முன்னாள் உறுப்பினரான டாக்டர் டி.மஸ்தான் தமிழ்நாடு வக்பு வாரியத்தின் முன்னாள் உறுப்பினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கடந்த 25 வருடங்களுக்குள் கேரளாவில்

## யானை மிதித்து 270 பேருக்கு மேல் பலி

கேரளாவில் கடந்த 25 ஆண்டுகளில் யானை மிதித்து இறந்தவர்களின் எண்ணிக்கை 270 இற்கும் மேல் உள்ளது. காயமடைந்தவர்கள் எண்ணிக்கை 100-இற்கும் மேல் யானையால் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கையில் 90 சதவீதம் யானைப் பாகன்கள் தான், 10 சதவீதம்தான் பொது மக்கள்.

இந்த சம்பவங்கள் எல்லாம் நவம்பர் முதல் பெப்ரவரி மாதம் வரைதான் கூடுதலாக நடந்துள்ளது. இந்தக் காலகட்டம் குளிர் காலகட்டமாகும். குளிர் காலத்தில்தான் யானைக்கு மதம் பிடிக்கும் வாய்ப்பு அதிகம் அதே சமயம் இந்தக் கால கட்டத்தில் கோவில் திருவிழாக்களும் அதிக அளவில் நடக்கும் எனவே இது வருமானம் தரும் மாதங்களாகும்.

எனவே யானை அதிபர்களும் பாகன்களும், யானை மதம் பற்றி தெரிந்தாலும் வெளியே கொண்டு போய் விடுகிறார்கள் யானைக்கு மதம் முற்றி தாக்க தொடங்குகிறது. மதம் பிடிக்கும் அறிகுறி தென்பட்டால் யானைகளை 3மாத காலம் கட்டிப் போட வேண்டும். ஆனால் அவைகளை மிரட்டியும் அடித்தும் திருவிழாக்களுக்கு கொண்டு போவதால் தான் மதம் காரணமாக சொன்னதைக் கேட்காது முரண்டு பிடித்தது வன்முறை தாக்குதல்களில் இறங்கும். திருவிழா காலங்களில் யானைகள் கொலை புரிவதற்கு இதுவே முக்கிய காரணமாகும். கடந்த 25 வருடங்களில் யானைகள் 274 பேர்களை கொன்றுள்ளது. இதில் 261 பேர் யானைப் பாகன்கள் 3 பேர் யானை அதிபர்கள் 9 பொது மக்கள் என கேரள அரசு அறிக்கை தெரிவிக்கிறது.

# அரியானாவில் சவுதாலா ஆட்சியில்

## ஊழல் மலிந்து விட்டது



### காங்கிரஸ் தலைவி சோனியா


அரியானா மாநில சட்டசபைத் தேர்தல் நடைபெறவுள்ளதை ஒட்டி அங்கு தீவிர பிரசாரம் நடைபெற்று வருகிறது. கட்சித் தலைவர்கள் பொதுக்கூட்டங்களில் பேசி வருகிறார்கள்.நேற்று முன்தினம் ரவால் என்ற இடத்தில் நடந்த தேர்தல் பிரசார பொதுக் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி அங்கு உரையாற்றுகையில்;

அரியானாவில் முதன் மந்திரி சவுதாலா ஆட்சியில் ஊழல் மலிந்துவிட்டது. அவரும், அவருடைய மகன்கள் அஜய்,அபய் ஆகியோரும் சேர்ந்து அரியானாவைப் பயங்கரவாதமும்,ஊழலும் நிறைந்த மாநிலமாக ஆக்கி விட்டார்கள். இம்மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அளவுக்குப் பயங்கரவாதம் இங்கே தலை விரித்தாடுகிறது.

அரியானாவில் சட்டம்-ஒழுங்கு பெரிய அளவுக்குச் சீர்குலைந்து இருப்பதற்கு சவுதாலாவின் அரசே பொறுப்பேற்க வேண்டும். இங்கு யாருக்கும் பாதுகாப்பு இல்லை. பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள். ஆள் கடத்தல் சர்வசாதாரணமாக நடக்கிறது. கொலை என்பது அன்றாட நிகழ்ச்சி ஆகிவிட்டது.

விவசாயிகள் கடனில் மூழ்கிக்கொண்டிருக்கிறார்கள். இதனால் தற்கொலையை நோக்கி போய்விடுகிறார்கள். தொழிலாளர்கள், வணிகர்கள் மற்றும் அனைத்துப் பிரிவினரும் சவுதாலா அரசு மீது அதிருப்தி அடைந்துள்ளனர். கிரிமினல் நடவடிக்கைகளுக்கும், சமூக விரோத சக்திகளுக்கும் ஒரு அரசாங்கம் பாதுகாப்பு தரத் தொடங்கி விட்டால்,அது சட்டம்-ஒழுங்கு சீர்குலைவில் கொண்டுபோய் விட்டுவிடும் என்று சவுதாலா ஆட்சியை தாக்கிப் பேசியுள்ளார் சோனியா.

## பாக். அணியின் இறுதிப் போட்டி வாய்ப்பை தடுத்து நிறுத்த வேண்டும்




நேற்று முன்தினம் அடிலேய்டில் நடைபெற்ற வி.பி. கிண்ண முக்கோண ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானை 58 ஓட்டங்களால் வெற்றி பெற்றாலும் பேர்த்தில் நடைபெறும் இறுதிப் போட்டியிலும் அவ்வணி ஆடும் சந்தர்ப்பத்தை நிறுத்த வேண்டும் என மேற்கிந்தியதீவுகள் அணியின் தலைவர் பிறையன் லாறா தெரிவித்துள்ளார்.

கடந்த போட்டியில் 158 ஓட்டங்களைப் பெற்றமை தனக்கு மகிழ்ச்சியளிப்பதாகவும் இதேபோன்று இன்று நடைபெறும் போட்டியிலும் ஆடி இன்னும் ஒரு திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார். இது தனது 250ஆவது ஒரு நாள் போட்டியாகும் என குறிப்பிட்ட அவர் இத்தொடரின் போது காயத்துக்குள்ளாகியதையும் எடுத்துக் கூறினார்.

339 ஓட்டங்களுக்கு நான்கு விக்கெட்டுக்களை இழந்தது ஒரு உலக சாதனை என இப்போட்டி பற்றி கூறிய பாகிஸ்தான் அணித் தலைவர் இன்சமாம் உல்-ஹக் லாறா தடுத்து நிறுத்தப்பட முடியாத திறமை வாய்ந்த வீரர் எனப் பாராட்டியுள்ளார்.

## நியூசிலாந்துக்கான அவுஸ். சுற்றுலா ஹமில்டன் மைதானம் புறக்கணிப்பு



நியூசிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள ஒருநாள் கிரிக்கெட் போட்டித்தொடரில் ஹமில்டனில் நடைபெறவிருந்த போட்டிவேறு மைதானத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மையில் இதே மைதானத்தில் நடைபெற்ற உலக 11பேர் அணி நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் உலக அணி 81 ஓட்டத்தில் ஆட்டமிழந்ததும் பந்து வீச்சுக்குச் சாதகமானதாக மட்டும் இருப்பதும் பல வீரர்கள் காயமடைய நேர்ந்ததுமான ஆடுகளம் இதற்கு காரணமாகும்.

வரும் மார்ச்சில் நியூசிலாந்து செல்லும் அவுஸ்திரேலிய அணி ஒக்லண்ட், கிரைச்சஸ் வெலிங்டன் ஆகிய இடங்களில் போட்டிகளில் ஆடும்.

இந்த நலநிதிப் போட்டி பற்றி நியூசிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவர் கூறியதாவது, ஏறத்தாழ 35 ஓவர்கள் மட்டுமே மொத்தமாக இப்போட்டியில் பந்து வீசப்பட்டதும் மிகச் சொற்பமான ஓட்டங்களில் ஆட்டமிழந்ததும் ஆடுகளத்தின் சீரின்மையைத் தெளிவுபடுத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஒரு வருடத்துக்கு முன்பு நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இந்தியா 100 ஓட்டங்களை எடுத்ததும் நியூசிலாந்து அதிலும் குறைந்த ஓட்டங்களில் ஆட்டமிழந்ததையும் குறிப்பிட்ட அவர் கடந்த ஏப்பிரலுக்குப் பின்னர் இம்மைதானம் சீரமைக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.


## பூரண குணமடையும் வரை போட்டிகளில் கலந்து கொள்ளேன்




முழுமையாக குணமடையும் முன்னர் அவசரப்பட்டு போட்டிகளில் கலந்து கொள்ள மாட்டேன் என இந்தியாவின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவிருக்கிறது. மும்பையில் புதிய செல்போன் அறிமுக விழாவில் கலந்துகொண்ட சச்சின் டெண்டுல்கர் நிருபர்களைச் சந்தித்தபோது மேற்கண்டவாறு தெரிவித்தார். பாகிஸ்தான் தொடர் குறித்து அவரிடம் கேட்ட போது வலி முழுவதும் குணமடையாமல் உடற்தகுதி பெறாமல் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் அவசரப்பட்டு விளையாட மாட்டேன்" என்று கூறினார். தவிர கனமான துடுப்பை பயன்படுத்துவதால் தான் அவருக்கு முழங்கை காயம் ஏற்பட்டது என்று கூறப்படும் செய்திகளுக்கும் அவர் மறுப்பு தெரிவித்தார். 5 முதல் 6 வாரம் ஓய்வு எடுக்கும்படி டாக்டர்கள் ஆலோசனைவழங்கியுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## சுனாமி நலநிதி கிரிக்கெட் போட்டி கபில்தேவ் அணிக்கு 5 விக்கெட் வெற்றி



சுனாமி நிவாரண கிரிக்கெட் போட்டியில் கபில்தேவ் அணி 5 விக்கெட் வித்தியாசத்தில் அமீர்கான் 11 பேர் அணியை தோற்கடித்தது.

சுனாமி நிவாரண நிதிக்காக மும்பை கிரிக்கெட் சங்கமும், ஹீரோ இந்தியா ஸ்போர்ட்ஸ் அகடமியும் இணைந்து நடத்திய 'ஏர்டெல்' கோப்பைக்கான காட்சி கிரிக்கெட் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று முன்தினம் பகல் இரவாக நடந்தது.

இந்தப் போட்டியில் தற்போதைய மற்றும் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், இந்தி நடிகர்கள் ஆகியோர் பங்கேற்றனர். ஒரு அணிக்கு முன்னாள் தலைவர் கபில்தேவும், மற்றொரு அணிக்கு நடிகர் அமீர்கானும் தலைவராக இருந்தனர். காயம் காரணமாக இந்தப் போட்டியில் ஆடாத டெண்டுல்கர் சிறப்பு அழைப்பாளராக வந்திருந்தார்.

போட்டி தொடங்குவதற்கு முன்பு 'சுனாமி' அலையால் ஏற்பட்ட பாதிப்பில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சுனாமிப் பாதிப்பில் சிக்கித் தப்பிய சிறுவர்கள் சிலரும் இந்த நிகழ்ச்சியின் போது வீரர்களுடன் மைதானத்தில் இருந்தனர்.

## வீரர்களின் தர வரிசைப் பட்டியல் முதன் முறையாக ஐ.சி.சி வெளியிட்டது



சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) முதன் முறையாக வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் ராகுல் ராவிட்-முதலிடம் பெற்றுள்ளார்.

அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலை மட்டுமே வெளியிட்டு வந்த ஐ.சி.சி, முதன் முறையாக வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை நேற்று முன்தினம் வெளியிட்டது. இதில் டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து சிறப்பாக ஆடி வரும் இந்தியாவின் ராகுல் ராவிட் 882 புள்ளிகள் பெற்று முதல் இடத்தைப் பிடித்துள்ளார். பந்து வீச்சில் அவுஸ்திரேலியாவின் மெக்ராத் 866 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளார். இது தவிர மிகச் சிறந்த சகல துறை ஆட்டக்காரர் வரிசையில் கலிஸ் முதல் இடம் பிடித்துள்ளார். பிளின் டாப் (இங்கி..,) போலக் (தென்ஆபிரிக்கா), சனத் ஜெயசூரியா (இலங்கை) சமிந்தவாஸ் (இலங்கை) ஆகியோர் அடுத்த நான்கு இடங்களில் உள்ளனர்.

ஒரு நாள் போட்டிகளில் அவுஸ்திரேலியத் தலைவர் ரிக்கி பொண்டிங் துடுப்பாட்டத்தில் முதல் இடம் வகிக்கிறார். இதில் சச்சின் நான்காவது இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளார். பந்து வீச்சில் தென் ஆபிரிக்காவின் ஷோன் போலக் முதலிடம் பெறுகிறார்.


## பெங்களூரில் விளையாட பாக். திருப்தி தெரிவிப்பு

'பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் போட்டியை பெங்களூரில் நடத்துவதில் பிரச்சினை இல்லை' என பாக்., பாதுகாப்புக்குழு தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகளில் பங்கேற்பதற்காக அடுத்த மாதம் 25இல் இந்தியா வருகிறது. இதற்கான மைதானங்களைப் பார்வையிட பாகிஸ்தானிலிருந்து பாதுகாப்புக்குழு இந்தியா வந்துள்ளது.

மொகாலி, கான்பூர் மைதானத்திற்கு திருப்தி தெரிவித்த இந்த குழு நேற்று முன்தினம் பெங்களூர் வந்தது. சின்னசாமி மைதானத்தை பார்வையிட்ட பின்னர் இந்தக் குழுவின் தலைவரும் பாக்., கிரிக்கெட் பிரதிநிதியுமான ஜாகிர்கான் நிருபர்களிடம் கூறுகையில்; "பெங்களூர் மைதானம் பற்றி பெரிய அளவில் கருத்துச் சொல்ல எதுவுமில்லை. இங்கு போட்டியை தாராளமாக நடத்தலாம். மைதான வசதிகள், தங்கும் அறைகள், ஆடுகளம் அனைத்தையும் பார்வையிட்டோம். மைதானம் பற்றிய விபரங்களை பாக்.கிரிக்கெட் சபைக்கு தெரிவிப்போம்" என்றார்.

## அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் பட்டம் வென்றார் செரீனா வில்லியம்ஸ்



அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற கிராண்ட் ஸ்லாம் டென்னிஸ் போட்டித் தொடரின் பெண்களுக்கான இறுதியாட்டத்தில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் லின்சே டெவன் போட்டை 2-6, 6-3, 6-0 என்ற செட்டில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றினார்.


முதலாவது ஆட்டத்தில் செரீனா வீழ்ச்சியைச் சந்தித்த போதும் மிகுதி இரு ஆட்டத்திலும் அவர் தனது வலிமையையும் திறமையையும் வெளிப்படுத்தி வெற்றியை தட்டிச் சென்றார்.

செரீனா வில்லியம்ஸ் இந்த போட்டித் தொடரில் இடைநடுவில் காயமேற்பட்டு சிகிச்சை பெற்று திரும்பிவந்தார்.

தான் எவ்வாறேனும் அவரிடம் வெற்றியை தாரைவார்த்து கொடுக்க நினைக்கவில்லை என்று கூறிய செரீனா, தனது கைமுறிந்து விழுந்தாலும் பரவாயில்லை இந்தப் போட்டியில் வெல்ல வேண்டும் என்ற உறுதியுடனிருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் தொடரில் தானும் சிறப்பாக ஆடி இறுதிப் போட்டி வரை முன்னேறியதாக குறிப்பிட்டுள்ள டெவன்போட் இறுதிப் போட்டியில் ஒரு பயங்கரமான அனுபவத்தை சந்தித்ததாகக் கூறுகிறார். இறுதி நேரத்தில் தான் மயக்கமுற்று விழும் தருவாயில் இருந்ததாகவும் அதனை செரீனா சாதகமாக்கிவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்; ஹைப்பையும் இணைக்க ஆலோசனை



பாகிஸ்தானுடனான டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் இந்தியாவின் மொகமட் ஹைப்பையும் இணைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

24 வயதான ஹைப் 2000ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவுடனான போட்டியில் சிறப்பாக ஆடினாலும், பின்னர் ஆடிய 7 இனிங்சிலும் 20 ஓட்டங்களை மட்டுமே தாண்ட முடிந்தது. எனினும், மூன்று வருட இடைவெளிக்குப் பின்னர் கடந்த வருடம் அவுஸ்திரேலியாவுக்கெதிராக இரண்டு அரைச் சதங்களைப் பெற்றுள்ளார்.

இந்த டெஸ்ட் போட்டிகளைவிட ஹைப் ஒரு நாள் போட்டிகளில் சிறந்து விளங்குகிறார். ஒரு நாள் போட்டிகளில் ஒரு சதம் மற்றும் பத்து அரைச்சதங்களையும் பெற்றார். அத்துடன் 2002ஆம் ஆண்டு லோட்சில் நடைபெற்ற நட்வஸ்ட் கிண்ண இறுதிப்போட்டியில் இந்தியாவின் வெற்றிக்குக் காரணமாக இருந்தார். அப்போட்டியில் அவர் ஆட்டமிழக்காது 87 ஓட்டங்களைப் பெற்றார்.

பாகிஸ்தானுடனான போட்டி ஏனையவற்றைவிட எப் போதும் அழுத்தம் கூடியதாகவே இருக்கும் என ஹைப் தெரிவித்தார்.

விளையாட்டு


## இந்தியாவுக்கு வாய்ப்பு

சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் இந்திய அணிக்கு புதிய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் தரவரிசையில் இந்தியா தற்போது 108 புள்ளிகளுடன் 3- வது இடத்தில் உள்ளது. அடுத்தமாதம் பாகிஸ்தான் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்ய உள்ளது. இந்தப் போட்டியில் இந்தியா வெற்றி பெற்றால் டெஸ்ட் தரவரிசையில் இந்தியா தனது தகுதியை உயர்த்திக் கொள்ள முடியும் என்று கணிக்கப்பட்டுள்ளது.



அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் பொப் பிரையன் மைக் பிரையன் ஜோடியை வென்ற மகிழ்ச்சியைக் கொண்டாடும் சிம்பாப்வேயின் வெய்ஸ் பிளக், கெவின் உலியெட் இணை.



## சிந்தனைக்கு

நாம் ஒன்று பட்ட மக்களாக - ஒரே தேசிய சக்தியாக- அணி திரண்டு எமது எதிரியின் சவாலை எதிர் கொள்ள வேண்டும்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 30-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham 23 ela @ yahoo. com

## பூனைக்கு விளையாட்டு...!

"பூனைக்குக் கொண்டாட்டம், எலிக்கு மரண அவஸ்தை" என்பது போன்றுள்ளது சிறிலங்கா விமானப் படையினர் வடமராட்சிக்கரையோரத்தில் உலங்குவானூர்தியில் இருந்து நடாத்திய வாண வேடிக்கை. வேறு விதமாகக் கூறுவதனால் தமிழ் மக்கள் படும் அவஸ்தையைக் கண்டு ரசிக்க சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பின் கீழ்மட்டச் செயற்பாடு இதுவாகும்.

சுனாமி பேரலைகள் விளைவித்த அனர்த்தத்தினால் கரையோர மக்கள் பெரிதும் தளர்ந்து போய்விட்டனர். காலம் காலமாக வாழ்ந்த கரையோரப்பகுதிகளில் குடியமரவும், தலை முறை தலைமுறையாக வாழ்வழித்த கடலில் இறங்குவதற்கும் தயக்கம் காட்டுகின்றனர்.

அது மட்டுமல்லாமல் நேற்று முற்பகலில் மீண்டும் ஒரு சுனாமி தாக்கப் போகின்றது என்ற வதந்தியால் மக்கள் வீடுகளை விட்டு ஓடி பின்னர் அதுவதந்தியென்றறிந்த பின்னர் வீடு திரும்பியிருந்தனர். அத்தோடு கரையோரங்களில் வாழும் மக்கள் இரவு வேளைகளில் வீடுகளில் உறங்குவதற்கு அஞ்சித் தொலை தூரங்களுக்கு சென்றே உறங்கி வருகின்றனர்.

மக்கள் இவ்வாறாக அல்லலும் பீதியுமுற்றுள்ள வேளையில் சிறிலங்கா விமானப் படை மக்களை மேலும் பீதி கொள்ள வைத்தமையானது இவர்கள் தமிழ் மக்களில் எவ்வளவு தூரம் அந்நியப்பட்டுள்ளனர் என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. இதேவேளை தமிழ் மக்களை இம்சைப்படுத்தும் ஒரு நீடித்த தொடர் நடவடிக்கைகளின் ஓர் அம்சமாகவே இதுவும் கொள்ளத் தக்கது.

ஏனெனில் சிறிலங்கா ஆயுதப்படையினர் தமிழ் மக்களை வருத்தி இன்பம் கண்டவர்கள்/ காண்பவர்கள் இவர்களிடம் இருந்து கரிசனையை எவ்வாறு எதிர் பார்க்க முடியும்? சிறிலங்கா ஆயுதப்படைகள் புரிந்த இனப்படுகொலை, அவர்கள் புரிந்த சித்திரவதைகள் என்பன உலகில் சாதாரண அளவை எட்ட முடியாது.

சிறிலங்கா ஆயுதப்படைத்தரப்பு மேற்கொண்ட படுகொலைகள் ஒருபுறம் இருக்க , அவர்கள் புரிந்த சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் கொடூரமானவை. மிருகத்தனமானவை இத்தகைய சித்திரவதைகளை மனிதர் என்ற நிலையில் வேறு எவருமே புரிந்திருக்க முடியாது. ஏனெனில் அத்தனை தூரம் அவை ஈவிரக்கம் அற்றவை, மிருகத்தனம் பொருந்தியவை.

ஆகையினால் இத்தகைய கொடூரங்களைப்புரிபவர்கள் மனங்களில் ஒரு வகை வக்கிரத்தனம் குடிகொண்டிருத்தல் வேண்டும். அல்லது மனோவியாதி கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.அவ்வாறு இல்லாது விட்டால் ஒருவர் சித்திரவதைக்கு உள்ளாகித் துடிக்கும் போது அதை எவ்வாறு மனிதர்களால் ரசிக்க முடியும்.

ஆனால் சிறிலங்கா ஆயுதப்படையினர் அவ்வாறே நடந்து கொண்டனர். மற்றவர்களைத் துன்புறுத்தி துயருற வைப்பதில் இன்பம் கண்டனர். இத்தகையவர்களுக்கு இன்று வாய்ப்புக்கள் குறைந்துள்ள நிலையில் உலங்குவானூர்தியில் இருந்து வாண வெடிகளை கொழுத்தி மக்களை பீதி கொள்ள வைத்ததோடு அவர்கள் படும் அல்லோலகல்லோலத்தைப் பார்த்து ரசித்துள்ளனர்.

இந்த வகையில் மக்களைத் துன்புறுத்துகின்றவர்கள் தான் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகவும், விடுவிப்பதாகவும் சந்திரிகா அரசாங்கம் கடந்த காலத்தில் கூறிக் கொண்டதும் உண்டு ஆகையால் இவற்றில் எதுவுமே மக்கள் மத்தியில் எடுபட்டதாக இல்லை. இவர்கள் என்றுமே தமிழ் மக்களின் எதிரிகளாகவும் விரோதிகளாகவுமே பார்க்கப்படுகின்றனர்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் என்றுமே தமிழ் மக்களின் பாதுகாவலர்களாகவோ நண்பர்களாகவோ இருக்கப் போவதில்லை. ஏனெனில் இவ் இரு இனங்களுக்கும் இடையிலான முரண்பாடு நீண்டது. அத்தோடு இவ்விரு இனத்தவரும் ஒன்றாக இணைந்து இருந்ததாகவும் வரலாறு இல்லை.

ஆகையினால் தமிழ் மக்களைச் சீண்டுவதும் இம்சிப்பதும் சிங்களப்படையினருக்கு ஒரு விளையாட்டாகவும் வேடிக்கையானதாகவும் இருக்க முடியும். ஆனால் இவ்வேடிக்கையும் கேலியும் விபரீதமானவையாகவும் மாறிவிடுதல் கூடும். ஆகையினால் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிப்பவர்கள் இத்தகைய விபரீத விளையாட்டுக்களையும் கவனத்திற்கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இத்தகைய செயல்கள் தமிழ் மக்களைத் திட்டமிட்டு இம்சிக்கும் செயலாகும்.

# இனப்பிரச்சினை, சுனாமி காரணமாக காணிப்பிரச்சினை ஏற்படும் வாய்ப்பு

### -மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் வலியுறுத்து-

(கொழும்பு)

இலங்கையில் இனப்பிரச்சினை மற்றும் சுனாமி ஆகியவற்றினால் நிலப் பிரச்சினை ஏற்படும் வாய்ப்புகள் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இனப்பிரச்சினை காரணமாக அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இராணுவ பாதுகாப்பு வலயங்கள் என்பன அமைக்கப்பட்டதன் காரணமாக நிலப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ் மக்கள் தமது நிலங்களை இழந்துள்ளார்கள். தமது வாழ்விடங்களை இழந்துள்ளார்கள் எனவே அவர்கள் மாற்றுச் சூழலில் வாழவேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளனர்.

தற்போதைய சூழ்நிலையில் சுனாமியின் பின்னர் இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

இதில் பலர் தற்காலிக வீடுகளிலும் வாடகை வீடுகளிலும் வாழ்ந்தவர்களாவர்.

எனவே இவர்களுக்கு புதிய நிலங்களை தேடிக்கொடுக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் கடற்கரையில் இருந்து 100 மீற்றர்களுக்கு அப்பால் குடியிருப்புகள் அமைக்கப்படவேண்டும் என்ற அரசாங்கத்தின் ஆலோசனையின் காரணமாக பலர் தமது வாழ்விடங்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதற்கு தீர்வாக காலியில் நேற்று மேற்கொள்ளப்பட்டுள்ளமையைப் போன்று பெருந்தோட்ட நிலங்கள் சுவீகரிக்கப்ப[illegible]னால் அங்கு தோட்டத் தொ[illegible]ளர்களின் இயல்பு நிலை பாதிக்[illegible]படும். அதேநேரம் அவர்களின் தொழில்களும் பாதிக்கப்பட வாய்ப்புகள் உருவாகியுள்ளன. எனவே இதற்கு உரிய தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதை மாற்று கொள்கைகளுக்கான மையம் வலியுறுத்தியுள்ளது. அது தொடர்பில் அந்த மையம் பரிந்துரை ஒன்றையும் வெளியிட்டுள்ளது இது தொடர்பாக கலந்துரையாடல் ஒன்றையும் நேற்று நடத்தியது. (32)

# நாட்டை முன்னெடுத்துச் செல்ல ஒன்றிணைந்த அரசியல் தேவை

### -எதிர்க் கட்சி தலைவர் ரணில் தெரிவிப்பு-

நாட்டை முன்னெடுத்து செல்வதற்காக ஒன்றிணைந்த அரசியல் தேவையென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட பழி வாங்கல் அரசியல் காரணமாக நாட்டின் எதிர்காலப் போக்கில் தடைகள் ஏற்பட்டதாகவும், அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்றி சட்டம் மற்றும் ஒழுங்கைப் பாதுகாக்கும் சிறந்த அரசியலுக்காக ஒன்றிணைந்த அரசியலுக்கு வருவதற்கான காலம் மலர்ந்துள்ளதென எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக் கட்சி தயாரித்த தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை வெளியிடும் நிகழ்வு கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இடம் பெற்ற போதே எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் 15 கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த தேசிய நிகழ்ச்சித் திட்டத்தை மக்களின் திறந்த கலந்துரையாடலுக்காக முன் வைக்கவும் ஐ.தே.க எதிர் பார்த்துள்ளதெனவும் தெரிவித்த அவர் முன் வைக்கப்பட்டுள்ள தேசிய நிகழ்ச்சித் திட்டம். ஒரு தேர்தல் கொள்கைப் பிரகடனம் அல்ல 15 கொள்கைகளை இனங்கண்டு இதனை மக்கள் முன் வைத்தோம். இவை அனைத்தும் மக்கள் முன்வைக்கப்படும். 3 கொள்கைகளை முதன் மைப்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளது. மக்களின் கருத்துரைகளை அறிந்து தேசிய கொள்கை கட்ட மைப்புக்களை உருவாக்குவோம் எனவும் இதனை உருவாக்கு வதற்கு தமது கட்சி உறுப்பினர் களையும் வேறு கட்சியினரையும் நடுநிலையான கொள்கைகள் கொண்ட வர்களையும் அறிவூட்டு வோம். முழு நாட்டிலும் இது குறித்து கலந்துரையாடல் நடத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# தோட்டக் காணி சுவீகரிப்புக்கு மலையக மக்கள் முன்னணி எதிர்ப்பு

பதுளை இங்குருகம தோட்டத்தில் 35 ஹெக்டேயர் காணியை பல்கலைக்கழக அமைப்புக்காக சுவீகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமையை மலையக மக்கள் முன்னணி கண்டித்துள்ளது. இந்த நடவடிக்கையானது அந்தத் தோட்டத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குரியதாக்கி விடும் என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே இந்தத் தோட்டத்தின் 25 ஹெக்டேயர் காணியை கைத்தொழில் பேட்டைக்காக அரசாங்கம் சுவீகரித்துள்ளது.

இந்த நிலையில் மொத்தமாகவே 120 ஹெக்டேயரே உள்ள குறிப்பிட்ட தோட்டத்தில் மேலும் 35 ஹெக்டேயர் காணி சுவீகரிக்கப்படுமானால் அங்குள்ள 250 தோட்டத்தொழிலாளர்களின் தொழில்களுக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் தெரிவித்துள்ளா இதேவேளை பல்கலைக் கழகத்துக்கு காணியை சுவீகரிக்கும் அதேநேரம் அதனால் பாதிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களுக்கு மாற்று திட்டம் ஒன்றை முன்வைக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு அப்பால் மாவட்டங்கள் தோறும் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவேண்டும் என்பதிலோ ஊவாவில் பல்கலைக் கழகம் அமைக்கப்படவேண்டும் என்பதிலோ மலையக மக்கள் முன்னணி எதிர்ப்புக்காட்டவில்லை எனத் தெரிவித்துள்ள பெ.சந்திரசேகரன், மலையகத்துக்காக தனியொரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கான முனைப்பில் அரசாங்கம் அக்கறை காட்டாமையையும் குறை கூறியுள்ளார். (32)

### -காலிப் பகுதியில்-

# சுனாமியால் பாதிக்கப்பட்டோரை குடியமர்த்த பெருந்தோட்டம் சுவீகரிப்பு

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களை குடியேற்ற காலிப்பகுதியில் உள்ள பெருந்தோட்டக்காணிகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன.இது தொடர்பான நிகழ்வு நேற்று காலி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பங்கேற்ற பெருந்தோட்ட கைத்தொழில்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா கடல் அலைப்பாதிப்புக்குள்ளானவர்களை குடி யேற்றுவதற்காக நமுனுகல பெருந்தோட்ட யாக்கத்துக்கு சொந்தமான 244 ஏக்கர் காணியும் தலவாக்கலை பெருந்தோட்ட யாக்கத்துக்கு சொந் தமான 40 ஏக்கர் காணியும் அரசுடமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித் தார்.இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாரளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தனவும் பங்கேற்றிருந்தார். (32)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உணவல்லாத பொருட்கள் வழங்கல்

கண்டாவளைப்பிரதேசத்தில் சுனாமி கடற் கோள் அனர்த்தத்தாலும் மற்றும் வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கண்டாவளை அபிவிருத்தி நிறுவனத்தால் பாய்கள், வாளிகள் உட் பட பல்வேறு வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்பட்டது. சுனாமியால் பாதிக்கப்பட்டு கல்லாறு பகுதி நலன்புரி நிலையங்களில் உள்ள 45குடும்பங்களுக்கும் புளியம்பொக்கனை கிராமத்தில் 82 குடும்பங்களும், கண்டாவளைக் கிராமத்தில் 65 குடும்பங்களுக்குமே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டுள்ளது (14)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகள் சென்று பார்வையிட்டனர்




சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களை விடுதலைப் புலிகள் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர். ஊல்லைப் பகுதியில் உள்ள முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்பிரிவுப் பொறுப்பாளர் கௌசல்யன் தலைமையிலான பிரதிநிதிகள் சென்று பார்வையிட்டுள்ளனர். இந்த சந்திப்பின் போது பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு நடவடிக்கைகள் மற்றும் நிவாரண விநியோகங்கள் குறித்து விடுதலைப்புலிகள் கேட்டறிந்துள்ளனர். மட்டக்களப்பிலிருந்து தெற்கே 112 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தப் பகுதியில் வாழும் பாதிக்கப்பட்ட மக்கள் தமது மீள்குடியேற்றம் குறித்து கவலை அடைந்துள்ளதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். (32)

## -அழிந்த நிந்தவூர் வைத்தியசாலை-

# அதே இடத்தில் இயங்க வைக்கக்கோரி மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

கடற்கொந்தளிப்பினால் சேதமடைந்துள்ள அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர் அரசாங்க வைத்தியசாலை புனரமைக்கப்பட்டு மீண்டும் அதே இடத்திலே இயங்க வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அப்பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தியுள்ளார்கள்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் அகதிமுகாமில் தங்கியுள்ளவர்கள் உட்பட பெருந்தொகையான மக்கள் கலந்துகொண்டுள்ளனர். இதன் போது பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹசீமிடம் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளார்கள்.

அந்த மகஜரில் தற்போது தற்காலிகமாக இயங்கிக்கொண்டிருக்கும்வைத்தியசாலைகளை பொருத்தமான கட்டடம் ஒன்றிற்கு மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள்.

## இத்தாலிய...

ளது. அரசாங்கத்தின் அனுமதியின்றி எந்தவொரு பொருட் களும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கோ, அன்றி விடுதலைப்புலிகளுக்கோ, வெளிநாடுகளிலிருந்து நேரடியாக அனுப்பமுடியாதென ஏற்கனவே அரசாங்கம் அறிவித்துள்ளது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் எங்கு அவசியம் தேவைப்படுகின்றதோ, அங்கு அனுப்பும் விடயத்தை அரசதரப்பினர் ஆய்வுசெய்து அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்களென சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேலும் தெரிவிக்கப்பட்டது. இதுபோன்று பொருட்கள் கடந்த 31 ஆம் திகதி அரசாங்கத்தின் அனுமதி பெறாது இத்தாலி நாட்டின் அதிகாரிகளால் வன்னிக்கு அனுப்பி வைக்கப்பட்ட சம்பவத்தையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாக மேலும் அவ் இணையத்தளம் கூறுகிறது.

# சுனாமியையடுத்து வழங்கப்படும் ஆதரவு பேச்சுக்களை ஆரம்பிக்க பயன்படுத்த வேண்டுமாம்

## சிறிலங்கா பிரதமர் மகிந்தராஜபக்ஷ கூறுகிறார்

சுனாமி அனர்த்தத்தையடுத்து இலங்கைக்கு வழங்கப்பட்டு வரும் சர்வதேச ஆதரவு சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளை துரிதப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்று பிரதம மந்திரி மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சகலஅரசியல் ஊடக, வர்த்தக, தொழிற்சங்க, சிவில் சமூகக் குழுக்களும் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை ஏற்படுத்திக் கொள்ள அவற்றின் பங்களிப்பை வழங்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

சுனாமி அனர்த்தத்தையடுத்து சமாதான முயற்சிகளின் எதிர்காலம் என்ற தொனிப்பொருளில் நேற்று கொழும்பில் இடம் பெற்ற விசேட கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உட்பட நாட்டிலுள்ள அனைத்து மக்களுமே நிலையான சமாதானத்தை விரும்புகின்றார்கள். எனவே குறுகிய நோக்கத்தில் ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதைத் தவிர்த்து ஆக்கபூர்வமான முறையில் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டங்களை அமுல் செய்யவேண்டியதன் அவசியத்தையும் பிரதம மந்திரி வலியுறுத்தியுள்ளார்.

## சமாதான...

களை ரணில் விக்கிரம சிங்க சந்தித்துப் பேசவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தச் சந்திப்பில் சுனாமியின் பின்னரான இலங்கையின் மீள் கட்டுமான பணிகள் தொடர்பில் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சு முயற்சிகள் குறித்தும் கலந்துரையாடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (32)

## அமெரிக்க...

நடவடிக்கைகள் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளன.

எனினும், சில நாடுகளுக்கும் நிதி நிறுவனங்களுக்கும் சேவை வழங்குவதற்காக இங்கிருந்து செல்ல வேண்டிய காலம் எழுந்துள்ளது. ஒன்றிணைந்த படைக் குழுவினரை மீண்டும் பிரதான தலைமையக முகாம்களுக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கைகள் இந்த இரு வாரங்களுக்குள் மேற்கொள்ளப்படும். நாம் இலங்கையிலிருந்து சென்ற போதிலும் கடல் அலைத் தாக்கத்தின் பின்னர் மீண்டும் பலம்மிக்கதொரு இலங்கையைக் கட்டியெழுபுவதில் இலங்கையிடம் காணப்படும் உத்வேகத்தை நாம் ஒருபோதும் மறக்க முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, இம்மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்காவின் இலங்கைத் தூதுவராலயப் பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், எதிர்கால மீள் கட்டமைப்புத் தேவைகளை தெளிவாக இனங்கண்ட பின்னர் ஒன்றிணைந்த அமெரிக்கப் படையினரை மீள்கட்டமைப்புப் பணிக்காக மீண்டும் அழைத்து வருவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன. எதிர்காலத்திலும் நீண்ட கால மீள் கட்டமைப்பு நடவடிக்கைகளுக்காக அமெரிக்க உதவியை வழங்குவதன் சாத்தியம் குறித்து நாம் தற்போது ஆராய்ந்து பார்க்கின் றோம் எனவும் தெரிவித்த அவர் பிரிகேடியர் ஜெனரல் பிறாங்கி பன்டரின் நடவடிக்கைகள் முடிவடைந்து அவர் சென்றாலும் அமெரிக்காவின் உதவி இலங்கைக்குக் கிடைக்கும் எனத்தான் கூறவிரும்புவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நாட்டை....

கால யுத்தத்திற்கு இடை வேளை கிடைத்திருப்பது போர் நிறுத்த உடன்படிக்கையால் மட் டுமே என்று சுட்டிக்காட்டியிருப் பதுடன் சமாதான பேச்சுவார்த் தையை ஆரம்பிப்பதற்கு பதவியி லிருக்கும் அரசாங்கம் மேற்கொள் ளும் சனநாயக நடவடிக்கைக ளுக்கு உதவுவோம் என்று குறிப்பிட்டுள்ளதுடன் தாம் (ஆட்சிக்கு வந்தால்) பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்போம் என்றும் பிரிக்கப்படாத நாடு நிரந்தர சமாதானத்தை நோக்கமாகக் கொண்டதாக அப்பேச்சுவார்த்தை அமையுமெனத் தெரிவித்துள்ளது. புத்த தர்மத்தின் அடிப்படையில் பொருளாதார கொள்கை அமையுமென இரண்டாவது நிகழ்ச்சித் திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது. சகலருக்கும் வீடு, காணி, சேமிப்புக் கணக்கு என்பவற்றை இலக்காகக் கொண்ட பொருளாதார திட்டம், உலக வர்த்தக சந்தையை கைப்பற்றுவதே நோக்கமாக கொண்டதாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மூன்றாவது நிகழ்ச்சித் திட்டமாக கிராமிய பொருளாதார வளர்ச்சியும், நான்காவது நிகழ்ச்சித் திட்டமாக வீட்டுப் பொருளாதாரமும், ஐந்தாவது நிகழ்ச்சித் திட்டமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும், ஆறாவது நிகழ்ச்சித் திட்டமாக பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.குடியிருப்பு, அடுத்தள வசதிக்ளை ஏற்படுத்தல், ஏழாவது நிகழ்ச்சித் திட்டமாகவும், தொழிலாளர் உரிமையை பேணிப் பாதுகாப்பது எட்டாவது நிகழ்ச்சித் திட்டமாகவும், பாரம்பரியத்தை பேணுவது ஒன்பதாவது நிகழ்ச்சித் திட்டமாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்டம், ஒழுங்கைப்பேணுதல் பத்தாவது நிகழ்ச்சித் திட்டமாகவும், சூழல் பாதுகாப்பு, கிராமசபை நிர்வாகத்தை மேம்படுத்துதல், சனநாயக உரிமைகளை பாதுகாத்தல், ஆன்மீக வளர்ச்சி என்பவை ஏனைய நிகழ்ச்சித் திட்டங்களாகவும் அறிவித்திருக்கும் ஐ.தே.க. நாட்டை ஒன்றிணைக்கும் ஒரு கொள்கையை அமுல்படுத்துவதே பதினைந்தாவது நிகழ்ச்சித் திட்டமாக முன்வைத்திருக்கின்றது. அரசாங்கம் எந்த வகையிலேனும் நடைமுறைப்படுத்துவதற்காக சிறந்த ஒரு நிர்வாகம் சம்பந்தமான ஒப்பந்தத்திற்கு அமைய அரசாங்கம் என்பது பற்றிய மேற்பார்வை செய்வதற்காக செயற்படுகின்றதா என்பது பற்றிய மேற்பார்வை செய்வதற்காக வேறு குழுவும் தெரிவு செய்யப்படும். அது சிவில் அமைப்பைக் கொண்டதான சிறந்த நிர்வாகத்திற்கான சபையாகும். அரசியல் கட்சிகள் இந்த தேசியக் கொள்கையுடன் இணைந்து செயற்படுவதும், தமது கட்சியின் மூலமும், உள்ளக அமைப்பின் மூலமும், இந்தத் தேசியக் கொள்கையை முறையாகச் செயற்படுத்துவதற்கான கொள்கையாக மேற்கொள்ளல். தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசியக் கொள்கையின் வரம்புக்கு அனுகூலமாவதோடு, அந்த யோசனையை நடைமுறைப் படுத்த முடியுமா என்றும் ஆராய்ந்து பார்ப்பதற்கும் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது, அவர்களின் தகுதியை ஆராய்வதற்கும் மக்களுக்கு அது பற்றிய எதிர்ப்பைத் தெரிவிக்கும் உரிமையை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற ஒரு குழு நியமிக்கப்படும். நாட்டைப் பாதிக்கும் முக்கிய பிரச்சினைகளையும் கொள்கை சம்பந்தமான அரசாங்கத்தினால் எடுக்கப்படும் செயற்பாடுகள் பற்றியும் அரசின் கொள்கை சம்பந்தமாகவும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை தேசிய மட்டத்தில் ஒரு சம்மேளனத்தை அமைத்து, அதன் மூலமாக, சிவில் அமைப்புகளின் கருத்து முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்படும். தேசிய ரீதியில் நம்முன் இருக்கும் சவால் சம்பந்தமாக, மக்களிடையே கலந்துரையாடலை ஏற்படுத்துவதும், அதன்மூலம் நாட்டின் தேசியத் திட்டம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதற்குமே இந்தப் பதினைந்து நிகழ்ச்சித் திட்டங்கள் நாட்டு மக்களின் முன் வைக்கப்படுவதற்கான அடிப்படை நோக்கமாகும்.இந்தக் கொள்கைத் திட்டங்கள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்ளுமாறும் பொதுமக்கள் உட்பட சகல தரப்பினரிடமும் ஐ.தே.க. அழைப்பு விடுத்துள்ளது. (32)

## நெதர்லாந்து...

பிரதிநிதி சந்திரா பெல்லகுறோம் அம்மையார் ஆகியோர் கலந்துகொண்டு தற்போதைய நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடினர். ஆழிப்பேரலையினால் அதிகளவு பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கு நிவாரண உதவிகள் புறக்கணிப்பற்ற முறையில் கிடைக்கவேண்டுமென்பதையும், போர்மூலம் பல்லாயிரக்கணக்கான மக்களைக் கொன்ற இராணுவமே தற்போது மக்களின் நலன்புரி நிலையங்களை பொறுப்பெடுத்திருப்பது பற்றியும் தமிழ் மக்கள் மீது நீண்டகாலமாக சிறிலங்கா அரசு காட்டும் புறக்கணிப்புகள் தொடர்பாகவும் விரிவாக இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பாக நெதர்லாந்தின் தெற்காசியப் பகுதிக்கான வெளிவிவகார அமைச்சு கருத்துத் தெரிவிக்கையில், இவ் அனர்த்தத்தால் தமிழ் மக்களே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதுவர் உறுதிப்படுத்தி இருப்பதாகவும் தாம் தமிழ் மக்களுக்கு உதவிகள் கிடைப்பதை தொடர்ந்தும் கண்காணிப்பதுடன் நெதர்லாந்து அரசினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஒதுக்கப்பட்ட உடனடி மற்றும் நீண்ட கால திட்டங்களுக்கான பெருமளவு நிதியானது சிறிலங்கா அரசிடம் ஒப்படைக்கப்படாமல் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதையே தாம் விரும்புவதுடன் அதற்குரிய ஒழுங்குகள் செய்திருப்பதாகவும், இவ்வுதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவது கண்காணிக்கப்படும் என்றும் உறுதியளித்தார்கள். அரச சார்பற்ற அமைப்புக்களால் பராமரிக்கப்படும் நலன்புரி நிலையங்களில் சிங்கள இராணுவ தலையீடுகள் பற்றிய விடயத்திற்கு கருத்து தெரிவிக்கையில்,தமிழ் மக்களுக்குரிய உதவிகள் சிங்கள இராணுவத்தின் தலையீடுகள் அற்ற நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்களின் மூலமே உதவி செய்யும்படி தாம் வலியுறுத்தியிருப்பதாகவும் சிறிலங்கா அரசானது அதற்கு எந்தவிதமான பதிலையும் தரவில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்கள். சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இச்சந்திப்புத் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளை தனது செய்தியில் இச்சந்திப்பானது ஆக்கபூர்வமாக அமைந்த தென்றும், நெதர்லாந்தின் தெற்காசிய வெளிவிவகார அமைச்சின் கருத்துக்கள் தங்களிற்கு திருப்தி அளித்திருப்பதாகவும் தெரிவித்தார்கள்.

## அன்ரன்....

கொழும்பில் தங்கியிருந்து இன்று அதிகாலை கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து லண்டன் பயணமாகவுள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்ட விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரை அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன், தமிழீழ கடற்படைத் சிறப்புத் தளபதி கேணல் சூசை, மட்டு அம்பாறை சிறப்புத் தளபதி கேணல் பானு, திருமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம் கட்டளைத் தளபதி கேணல் தீபன் விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தமிழீழக் காவல்துறைப்பொறுப்பாளர் பா. நடேசன் நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், மாலதி படையணி சறப்புத் தளபதி கேணல் யாழினி (விதுஷா) சோதியாப் படையணி சிறப்புத் தளபதி கேணல் துர்க்கா அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் தமிழினி உட்பட பொறுப்பாளர்கள், போராளிகள் வழியனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.(சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது